REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 26 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 203 | Monday 26, August, 2024 | 16பக்கங்கள் | 50/-

## கடவுச்சீட்டுகளைப் பெற புதிய முறை அறிவிப்பு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் புதிதாக அறிமுகப்படுத்திய இணையவழி பதிவு முறையை நீக்கி, கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கான புதிய முறைமை குறித்து அறிவித்துள்ளது.

இது குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 23) முதல் கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிப்பதற்காக பதிவு செய்ய 06

### மக்களை ஏமாற்றியது போதும், இனியும் பொய்கள் கூறுவதை நிறுத்திவிட்டு



# IMF உடன் கலந்துரையாட வருமாறு சஜித், அனுரவுக்கு ஜனாதிபதி ரணில் சவால்

### இருவரும் மேடைகளில் கூறிவரும் பொய்களின் உண்மைத்தன்மையை முழு நாட்டு மக்களும் உணர்ந்து கொள்ள இதுவே வழியென்கிறார் ஜனாதிபதி



இனியும் மக்களுக்கு பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணையவழி முறையில் பகிரங்க கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு, சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு சவால் விடுவதாகவும், இதன் மூலம் அவர்கள் மேடைகளில் சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மையை முழு நாட்டு மக்களும் கண்டுகொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஐக்கிய தேசிய கட்சி விசேட சம்மேளன கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும், அவ்வாறு நடந்தால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, வரிகளை குறைப்பதாகவும் பொருட்களின் விலைகளை குறைப்பதாகவும் தமது கொள்கைப் பிரகடனங்களில் சஜித் பிரேமதாசவும், அனுரகுமார திஸாநாயக்கவும் மக்களை ஏமாற்றி நாட்டை நாசமாக்க முயற்சிப்பதாக 06

## இஸ்ரேலில் அவசரகால நிலைமை பிரகடனம்

### கெய்ரோவில் சமதான பேச்சுக்கான ஏற்பாடுகள்



இஸ்ரேல் இராணுவத்துக்கும், லெபனான் ஹிஸ்புல்லா அமைப்புக்குமிடையில் கடும் மோதல் மூண்டுள்ளதால், இஸ்ரேலில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலின் வடக்கு எல்லைகள் மீது ஹிஸ்புல்லா 06

## முன்னாள் எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்னாள் எம்.பிக்களான அப்துல்லா மஹ்ரூப் மற்றும் சதாசிவம் ஆகியோர் தீர்மானித்துள்ளனர். பொருளாதார நெருக்கடியிலிருந்து குறுகிய காலத்துக்குள் நாட்டை மீட்டெடுத்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுமையே இந்த நாட்டுக்குத் தேவையென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து முன்னாள் எம்.பி. சதாசிவம் தெரிவித்ததாவது;

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்ததை நாம் மறக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்த போது படிப்படியாக மீளக் கட்டியெழுப்பியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரத்தைப் போன்று நாட்டு மக்களின் பொருளாதாரத்தையும் புரிந்து கொண்ட அறிவார்ந்த தலைவரென ரணில் விக்கிரமசிங்கவை அறிமுகப்படுத்தலாம். முன்னாள் எம்.பி. அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்ததாவது: 06

### அரசு ஊழியரின் சம்பள உயர்வு உட்பட சலுகைகளை உள்ளடக்கி

## 2025 பட்ஜெட்டை தயாரிப்பது எப்படி தரவுகளுடன் நிரூபிக்குமாறு சஜித் பிரேமதாசவுக்கு சவால்

### அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கிழக்கில் தெரிவிப்பு

**மட்டக்களப்பிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு அள்ளி வழங்கி வருகிறார். இதற்கான நிதி நாட்டுக்கு கிடைக்காவிட்டால், வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு எங்கிருந்து நிதியை பெற்றுக் கொள்வார்? இதற்காக அவரிடம் உள்ள வேலைத் திட்டம் என்ன? நாட்டு மக்களுக்கு தெளிவாக இதை குறிப்பிட வேண்டுமென கேட்டுக்கொள்வதாக 06

## போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலுடன் ஒன்றிணைவு



கெமுனு விஜேரத்னவும் ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்த, தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் உட்பட 10 போக்குவரத்துச் சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன உள்ளிட்ட சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கொழும்பு பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசார அலுவலகத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இது குறித்து தெரிவித்தனர்.

மீண்டும் எரிபொருள் வரிசை ஏற்படுவதைத் தாம், விரும்பவில்லையென சுட்டிக்காட்டிய போக்குவரத்து சங்கத்தின் பிரதிநிதிகள், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியாமல் தாம், எதிர்கொண்ட இன்னல்களை மறக்கவில்லையெனவும் தெரிவித்தனர். 06

## பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பம்



பாடசாலைகள் அனைத்தும் இன்று (26) திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்தும் இவ்வாறு மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகளுக்காக, இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. இரண்டாம் பாடசாலை தவணை கடந்த வெள்ளிக்கிழமை (16) முடிவடைந்ததும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தன. இதையடுத்து மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபை தேர்தலை நடத்தி அதிகார பகிர்வை வழங்க வேண்டும்



### இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்

**மட்டக்களப்பிலிருந்து லோரன்ஸ் செல்வ நாயகம்**

நீண்ட காலம் தீர்க்கப்படாத பிரச்சினைக்கு தீர்வாக மாகாண சபை தேர்தலை நடத்தி, முடிந்தளவு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். ஏனைய கட்சிகளைப் போன்று வெறுமனே போலியாக ஒப்பந்தங்களை மேற்கொள்ளப் போவதில்லையென 06



03
### தமிழரின் தெரிவு ஜனாதிபதி ரணிலாகவே இருக்க வேண்டும்



03
### 05 வருடங்களில் 10 இலட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்பாடு

பணவீக்கத்துக்கேற்ப சம்பளம் அதிகரிக்கப்படும்

## பணியிலிருந்து நீக்கப்பட்டோர் சேவையில் இணைக்கப்படுவர்



நியாயமற்ற வகையில் பணியிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தெஹியத்தகண்டிய பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார கூட்டத்தில், அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்பின்போது, சிவில் பாதுகாப்பு 06

### 2019 சர்ச்சைக்குரிய அறிக்கை

## விவாதத்துக்கு வருமாறு அனுரவுக்கு ஹக்கீம் சவால்



தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்கவை, எந்தவொரு தொலைக்காட்சி அலைவரிசையிலும் நேரடி விவாதத்திற்கு வருமாறு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் சவால் விடுத்துள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம், நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்னர், பாராளுமன்ற 06

## தமிழ் பொது வேட்பாளர் மூலமாக எதையும் சாதித்துவிட முடியாது



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் மூலமாக, எதையும் சாதிக்க முடியாது. இவ்வாறான முயற்சிகள், இருக்கக் கூடிய அரசியல் பலத்தை சிதைத்து விடக்கூடியதாகவே இருக்குமென, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில், "எண்ணிக்கையில் சிறுபான்மையாக 06

## நாடு வறுமையிலிருந்தாலும் ஆட்சி செய்தவர்கள் இன்று செல்வந்தர்களாக உள்ளனர்



நாடு இன்று வறுமை நிலையிலிருந்தாலும், நாட்டை ஆட்சி செய்த குடும்பங்கள் செல்வந்தர்களாக மாறியுள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெல்லவாய பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடனை மீளச் செலுத்த முடியாத அளவுக்கு, வறுமையான நாடாக இலங்கை மாறியுள்ளது. 06

# அம்பாறை, மட்டு மாவட்டத்தில் ஜனாதிபதி

## ஏறாவூர்







## அக்கரைப்பற்று







## பொத்துவில்







## மட்டக்களப்பு








தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒகஸ்ட் 26 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

சுபஹ் - 04.46
லுஹர் - 12.14
அஸர் - 03.25
மஃரிப் - 06.22
இஷா - 07.34

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் ஆவணி 09

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# மக்களை வாழ வைப்பது அடிப்படை உரிமை மீறலாகாது எதிர்காலத்திலும் மக்களுக்காக எதையும் செய்வோம்

## மட்டு. கல்லடி மக்கள் பேரணியில் ஜனாதிபதி தெரிவிப்பு



மக்களுக்கு நிவாரணம் வழங்கி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்தை எதிர்கட்சியினர் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க அரசாங்கம் செயற்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்குவோம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் கைகோர்த்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் (24) முற்பகல் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இப்பொதுக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதுடன் ஜனாதிபதிக்கு பலத்த வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த மேடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ரோயல் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் சிவலிங்கம் அவர்களும் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

"எந்தவொரு கோழைத்தனமான செயல்பாடுகளாலும், நம்முடன் துன்பப்படும் மற்றவர்களைக் கைவிட்டு, ஓடிப்போய் எங்கள் நகரத்திற்கு நாம் ஆபத்தை ஏற்படுத்த மாட்டோம்" என்று ஏதென்ஸ்

06

தினகரன் 92 வருடங்களுக்கு முன்

தினகரன்

இன்று 26 ஒகஸ்ட் 1932


அரசாங்க சபைக் கூட்டம்

ஏழைகள் கஷ்ட நிவாரண அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது

ஸ்ரீமதி மொலமுரேயின் யோஜனைகள்

உபாத்தியாயர் சம்பளவிஷயம்; திரு. சொய்சா தீர்மானம் தோற்றுப் போயிற்று; சபையில் அமளி.

இன்றைய தினம் அரசாங்க சபைக் கூட்டத்தில் ஏழைகள் கஷ்ட நிவாரண யாதாஸ்து, பதுல்லா உப்புக் கூட யாதாஸ்து, மருத்துவப் பயிற்சி யாதாஸ்து முதலிய மூன்று யாதாஸ்துகள் அங்கீகரிக்கப்பட்டன.

மருத்துவ சாஸ்திரம் எல்லா ஸ்திரீகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும், பல தீவில் பிரசவ ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஸ்ரீமதி மொலமுரே கூறினார்.

### அரசாங்க சபைக் கூட்டம்

ஏழைகள் கஷ்ட நிவாரண அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது

ஸ்ரீமதி மொலமுரேயின் யோஜனைகள்

உபாத்தியாயர் சம்பள விஷயம்; திரு. சொய்சா தீர்மானம் தோற்றுப் போயிற்று; சபையில் அமளி

இன்றையதினம் அரசாங்க சபைக் கூட்டத்தில் ஏழைகள் கஷ்ட நிவாரண யாதாஸ்து, பதுல்லா உப்புக் கூட யாதாஸ்து, மருத்துவப் பயிற்சி யாதாஸ்து முதலிய மூன்று யாதாஸ்துகள் அங்கீகரிக்கப்பட்டன.

மருத்துவ சாஸ்திரம் எல்லா ஸ்திரீகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும், பல தீவில் பிரசவ ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஸ்ரீமதி மொலமுரே கூறினார்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# ஜனாதிபதித்தேர்தல் நடைபெறும் வரை தபால் ஊழியர்களின் விடுமுறை இரத்து

ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வரை, தபால் ஊழியர்களின் விடுமுறைகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்துள்ளதாக பிரதி தபால் மா அதிபர், ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை கருத்திற் கொண்டுஅவர்களின்விடுமுறையை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அத்தியாவசிய காரணங்களுக்காக விடுமுறை எடுக்க வேண்டுமாயின், மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி தபால் மாஅதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, தபால் மூல வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகளை இன்று தபால் நிலையங்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் செப்டம்பர் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் தபால் மூல் வாக்குப் பதிவுகள் நடைபெறவுள்ளன

# கத்தோலிக்க ஆயர் பேரவையின் அருட்தந்தையருடன் ஜனாதிபதி சந்திப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர், குருநாகல் ஆயர் ஹெரோல்ட் அந்தோனி பெரேரா உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர் பேரவையின் அருட்தந்தையர்கள், அண்மையில் ஜனாதிபதியுடன் சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் செயலாளர் நாயகம் அருட்தந்தை டொன் அன்டன் ஜயக்கொடி, கொழும்பு உதவி ஆயர் உள்ளிட்ட அருட்தந்தையர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டில் கல்விச் சீர்திருத்தங்கள், ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணையின் முன்னேற்றம், சுற்றுச்சூழல் மற்றும் கத்தோலிக்க திருச் சபை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்தும் கத்தோலிக்க ஆயர் பேரவையின் அருட்தந்தையர்களுக்கு ஜனாதிபதி இதன்போது தெரியப்படுத்தினார்.

# மருத்துவ தளபாடங்கள் கையளிப்பு



(பாலமுனை விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள சுகாதார நிறுவனங்களுக்கு

மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை

இவற்றை வழங்கி வருகிறது. மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு மருத்துவ தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (24) வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல். எம்.மிஹ்லார் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தளபாடங்களைக் கையளித்தார்.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம். சீ.எம்.மாஹிர், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# சவால்களிலிருந்து தப்பியோட கூடாதென கற்பித்த ஆசிரியர்கள்

## தனது சிறுவயது ஆசான் சிவலிங்கம் குறித்து ஜனாதிபதி பெருமிதம்



சவால்களிலிருந்து பின்வாங்கக் கூடாது என்று எனக்கும், பிரதமருக்கும், முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்கவுக்கும், முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோருக்கும் பன்னிரெண்டு, பதின் மூன்று, பதினான்கு வயதுகளில் கற்பித்த பி. சியாலிங்கம் போன்ற ஆசிரியர்கள் சஜித் பிரேமதாசவுக்கு கற்பிக்காததாலேயே சவால்களை கண்டு ஏற்றுக்கொள்ளாமல் ஓடியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி கற்கும் போது கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய பி. சிவலிங்கம், ஜனாதிபதி கலந்துகொண்ட மட்டக்களப்பு மக்கள் பேரணியின் மேடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு ஆசி வழங்கினார்.

இந்த மக்கள பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ் மக்கள் விடுதலைக் கட்சியின் தலைவர் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஏற்பாடு செய்திருந்த "இயலும் ஸ்ரீலங்கா" பொதுக்கூட்டம் சிவானந்தா தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இதன் போது மேடைக்கு வந்த ஆசிரியர் சிவலிங்கம் இவ்வாறு ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

தற்போது, ஓய்வுபெற்ற பின்னர் மட்டக்களப்பிலுள்ள தனது வீட்டில் வசித்து வந்த 98 வயதான பி. சிவலிங்கம் தனது மாணவர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு வருவதாக அறிந்து இந்தப் பேரணிக்கு வந்திருந்தார்.

தனது ஆசிரியரை அருகில் அமரச் செய்த மாணவன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பேரணி முடியும் வரை தனது பக்கத்திலேயே ஆசிரியரை மேடையில் அமர வைத்திருந்தார்.

# வேட்பாளர் மரணித்தால் வேறு ஒருவரை நியமிக்க சந்தர்ப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் மரணமடைந்தால், அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்க சந்தர்ப்பம் உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலுக்காக வேட்புமனுவை சமர்ப்பித்த கட்சி அல்லது நபருக்குப்பதிலாக அவர் சார்பில் வேறொருவரை நியமிக்க சந்தர்ப்பம் இருப்பதாக தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு 39 வேட்பாளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இருப்பினும், இவர்களுள் மாரடைப்பு காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட மொஹமட் இல்யாஸ் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

இந்நிலையில், அவரது பெயர் வாக்குச்சீட்டிலிருந்து நீக்கப்படமாட்டாது என்று தெரிவித்த தேர்தல் ஆணையாளர் நாயகம், அவருக்கு பதிலாக அவர் சார்பில் வேறொருவரை நியமிக்க இடம் உள்ளதாக கூறினார்.

06

# நாட்டை மீட்டெடுத்த தலைவருக்கு நன்றி செலுத்த மக்கள் அணி திரள்வு

பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடந்த நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி நன்றி தெரிவிக்க, மக்கள் அணி திரண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

திவுலபிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, நிமல் லான்சா இந்த கருத்துக்களை வெளியிட்டார். மேலும் கருத்து தெரிவித்த நிமல் லான்சா,

வீழ்ந்த நாட்டை "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீட்டெடுத்தார். நாட்டை வீழ்த்தியது யார் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். நாடு வீழ்ந்து கிடந்த நாட்டை மீட்பதற்கு உதவ எவரும் இல்லாத போது, ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். சஜித் பிரேமதாசவும் அநுரகுமாரவும் முடியாது என்றனர் . ஆனால், ரணில் விக்கிரமசிங்க சவாலை ஏற்றுக்கொண்டார்.



எ ரி பொ ரு ள், மின் சாரம், உரம், மருந்து எதுவும் இல்லாத போது மக்களையும் நாட்டையும் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பின், சிலர் அந்த வரலாற்றையே மறக்க முயற்சிக்கிறார்கள். நாங்கள் வீழ்ந்து கிடந்த போது, திக்குத் தெரியாது நின்ற போது, ஜனாதிபதி வந்து தோள் கொடுத்தார்.

நாட்டை உயர்த்திய அந்த தலைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

நாங்கள் வேண்டாமென கூறியபோதும் காலிமுகத்திடலிலிருந்த அரகல கிராமத்தைத் தாக்கி, நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்தினர். அன்று ரணில் ராஜபக்ச என சஜித் கூறினார். இன்று அவ்வாறு கூற முடியாது.

வெற்றி பெறுவதற்காக ராஜபக்சக்கள் இன்று தேர்தலில் போட்டியிடவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க, ராஜபக்சக்கள் இன்று சஜித் பிரேமதாசவுக்கு உதவுகிறார்கள். ஜே.வி.பிக்கும் உதவுகிறார்கள். ஆனால் எமது அணி, வீழ்ந்து கிடந்த நாட்டை நாட்டை மீட்டெடுத்த தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவி செய்கிறது.

நாம் மனசாட்சிப்படி செயல்பட வேண்டும். இன்று சஜித் பிரேமதாச ராஜபக்சவை குறை கூறவில்லை. ஜே.வி.பி ராஜபக்சவை குற்றம் சொல்லவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க மீதே குற்றம் சுமத்துகிறார்கள்.

அதற்கு முக்கிய காரணம் ரணில் விக்கிரமசிங்க இன்று பெரும் சவாலாக இருப்பதுதான்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி செலுத்த மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கின்றனர். இன்று அனுர குமார, ராஜபக்ஷவுடன் டீல், ராஜபக்சவுடன் சஜித் பிரேமதாச டீல். ஆனால் எங்கள் அணி எவருடனும் டீல் இல்லை. எங்களது தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து வருகிறது. ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்தில் மக்கள் அணி திரண்டு வருவதாகவும் நிமல் லான்சா கூறினார்.

# இறைவரித் திணைக்களத்தின் அதிகாரிகளாக வேஷமிட்டு மோசடி

## வர்த்தகர்களிடம் பணம் வசூலிப்பதாகவும் முறைப்பாடு

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில், சில மோசடி குழுக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வரிப் பணத்தை வசூலிப்பதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைப்பதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, பாணந்துறை, நீர்கொழும்பு, வென்னப்புவ, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென திணைக்களத்தின் மத்திய குழு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் வரி வகைகள் தொடர்பான வரிப்பணத்தை, அரச வங்கிகளில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்குகளில் மாத்திரம் வைப்பிலிடுமாறு உள்நாட்டு இறைவரி திணைக்க ள அதிகாரிகள் வரி செலுத்துவோரை அறிவுறுத்துகின்றனர்.

மாறாக பணம் அல்லது காசோலைகள் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாதெனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இனை கவனத்தில் கொண்டு செயற்படுமாறும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறும், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய மோசடிக்காரர்களிடம் சிக்கியிருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு, உள்நாட்டு இறைவரி திணைக்களம் மக்களை கோரியுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 20


## குறள் தரும் சிந்தனை



இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்

துன்பத்திலேயே பெருந்துன்பம் பகையுணர்வுதான்.
அந்த உணர்வை ஒருவன் அகற்றி விடுவானேயானால்,
அது இன்பத்திலேயே பெரும் இன்பமாகும்.

# கருத்துக் கணிப்புகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு

ஜனாதிபதி தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்துவதற்கும் ஜனநாயக விழுமியங்கள் பேணிப் பாதுக்காப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

அந்த வகையில் இத்தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்கென 12 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தியா, நேபாளம், பங்களாதேசம், பாகிஸ்தான், மாலைதீவு உள்ளிட்ட நாடுகளும் அவற்றில் அடங்கியுள்ளன.

அதேநேரம், ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழு இலங்கைக்கு தற்போது வருகை தந்துள்ளது. இதற்கு மேலதிகமாக பொது நலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும் ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் ஈடுபடவென இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார்.

அத்தோடு உள்நாட்டில் பெப்ரல் உள்ளிட்ட சுயாதீன தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கும் இத்தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்து தகுதி பெற்றவர்களுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று முதல் தபாலகங்களுக்கு வழங்கப்பட உள்ளன. என்றாலும் தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளிலும் 11ஆம், 12 ஆம் திகதிகளிலும் இடம்பெறும்.

39 அபேட்சகர்கள் களமிறங்கியுள்ள இந்த ஜனாதிபதி தேர்தலின் நிமித்தம் தேர்தல் களம் நாளுக்கு நாள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. அத்தோடு கட்சித்தாவல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. அபேட்சகர்களும் வாக்காளர்களுக்கு தினம் தினம் புதுப்புது வாக்குறுதிகளை வழங்கவும் செய்கின்றனர்.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி தேர்தல் குறித்த கருத்து கணிப்புகளும் நாளுக்கு நாள் வெளியிடப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு கருத்துக்கணிப்பும் பாரிய வித்தியாசங்களைக் கொண்டவையாகவும் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான ஏற்றதாழ்வுகளைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. அதனால் இந்தக் கருத்துக்கணிப்புகள் சுயாதீனமானவையாகவோ நடுநிலையானவையாகவோ விளங்கவில்லை என்பது தான் மக்களின் கருத்தாக உள்ளது.

இவ்வாறான சூழலில், இக்கருத்துக் கணிப்புகள் குறித்து கவனம் செலுத்திய தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, 'ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் மேற்கொண்டதாக தெரிவிக்கும் கருத்துக் கணிப்புகளை நம்ப வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளதோடு இந்தக் கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் வாக்காளர்கள் தங்கள் கருத்துகளை மாற்ற வேண்டிய அவசியமும் இல்லை' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுத் தலைவரின் இந்த அறிவிப்பை பலரும் வரவேற்றுள்ளனர். ஏனெனில் ஜனநாயக விழுமியங்களுக்கு அமைய சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடாத்தவென அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தேர்தலின் நிமித்தம் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவே இன்னும் ஒரு வார காலத்திற்கும் மேற்பட்ட காலமுள்ளது. அத்தோடு மக்கள் வாக்களிப்பு இடம்பெறவும் சுமார் மூன்று வார காலமுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கையில் அவை முழுமையான கருத்துக்கணிப்புக்களாக இருக்கவே முடியதாது என்பது தான் சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

தங்கள் சார்பான அபேட்சகருக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க சிலர் எடுக்கும் முயற்சிகளின் வெளிப்பாடு தான் இத்தகைய கணிப்புக்கள். இதனை வாக்காளர்கள் அறியாதவர்கள் அல்லர். அவர்கள் தங்களது வாக்குகளை நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி பயன்படுத்துவதற்கு ஏற்கனவே தீர்மானித்தவர்களாக உள்ளனர். கடந்த காலத்தில் விட்ட தவறுகளை இனியும் விட அவர்கள் தயாராக இல்லை.

2022ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு முகம் கொடுத்த பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக எதிர்கொண்ட பாதிப்புக்களையும் தாக்கங்களையும் அசௌகரியங்களையும் அவர்கள் இன்னும் மறந்து விடவில்லை. அந்த சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்காக முன்வந்து தீர்மானம் எடுத்து செயற்பட்டவர்கள் யார் என்பதையும் மக்கள் நன்கறிவர். 2022ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் ஏற்பட்டது போன்ற ஒரு பொருளாதார வீழ்ச்சி, நெருக்கடி நாட்டில் மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் ஒவ்வொரு வாக்காளரும் உறுதியாக உள்ளனர்.

அதனால் தங்கள் தங்கள் நலன்களுக்காக வெளியிடப்படும் கருத்துக்கணிப்புக்களுக்காக தங்களது கருத்துக்களை வாக்காளர்கள் மாற்றிக்கொள்ளப் போவதுமில்லை. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரது வேண்டுகோளும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# சவூதி ரியாத்தில் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு






மூன்றாவது உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு (GAIN), சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமரும் சவூதி தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு அதிகார சபையின் (SDAIA) பணிப்பாளர்கள் குழுவினது தலைவருமாகிய முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அசீஸின் ஆதரவில் ரியாத் நகரின் மன்னர் அப்துல் அசீஸ் சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது. செப்டம்பர் 10 முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறும் இம்மாநாட்டில் உலகளாவிய செயற்கை நுண்ணறிவுத் துறைசார் வல்லுனர்களும், சர்வதேச தலைவர்களும் ஒன்றுகூடவுள்ளனர்.

சவூதி அரேபியாவின் தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு அதிகார சபையினால் (SDAIA) இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகிறது. இம்மாநாட்டின் போது, புத்தாக்க செயற்கை நுண்ணறிவு, நகர்ப்புற வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவின் நெறிமுறை ஆளுமை போன்ற முக்கிய கருப்பொருள்களில் ஆய்வுகள் இடம்பெறவுள்ளன. இவற்றின் மூலம் சமூகம், வணிகம், ஆளுமை ஆகியவற்றில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன.

Accenture, Oracle, Dell Technologies, Simens, Boston Dynamics, மற்றும் Google Cloud போன்ற தொழில்துறை வல்லுனர்களும் இவ்வுச்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 300க்கும் அதிகமான பேச்சாளர்கள் பங்கேற்கும் இம்மாநாட்டில் உலகத் தலைவர்கள், செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள் அடங்கலான துறைசார் முக்கியஸ்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இம்மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு சார் கலந்துரையாடல்கள், விவாதங்கள் இடம்பெறும். அத்தோடு, உலகளாவிய செயற்கை நுண்ணறிவு சார் முயற்சிகளை இயக்கும் வகையிலான சர்வதேச ஒத்துழைப்புகளுக்கு வழிவகை செய்யப்படுவதோடு எல்லைகளைக் கடந்த நெறிமுறை புத்தாக்கங்களும் ஊக்குவிக்கப்படும். இந்த உச்சி மாநாட்டில், பொது செயற்கை நுண்ணறிவின் எதிர்காலம் குறித்த கலந்துரையாடல், செயற்கை நுண்ணறிவு சக்தியூட்டப்பட்ட துல்லிய மருத்துவம் குறித்த குழுக் கலந்துரையாடல்கள், நிலையான வளர்ச்சி மற்றும் ஸ்மார்ட் நகரங்களில் செயற்கை நுண்ணறிவின் பங்கு குறித்த செயலமர்வுகள் போன்ற உயர்மட்ட அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

இம்மாநாடு குறித்து சவூதியின் தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு அதிகார சபையின் தலைவர் கலாநிதி அப்துல்லா பின் ஷரப் அல் காம்தி குறிப்பிடுகையில், 'மூன்றாவது உலகளாவிய AI உச்சிமாநாட்டிற்கு நாங்கள் தயாராவதன் ஊடாக ஒரு புதிய சகாப்தத்தில் பிரவேசிக்கிறோம். AI எதிர்காலத்தில் எத்திசை நோக்கிச் செல்லும், மேலும் நே ர்ம றையான எதிர்காலத்தை வடிவமைக்க நாம் தீர்க்க வேண்டிய நெறிமுறை சிக்கல்கள் என்பவற்றை ஆராய்ந்து அனுகவிருக்கறோம். AI இன் திறனை முழுமையாக உணர்ந்து அதன் விளைவுகளை பொறுப்புடன் கையாள்வது முன்னெப்போதையும் விட முக்கியமானது'.

'பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் தலைமையின் கீழ், அனைவருக்கும் பயனளிக்கும் AI தொழில்நுட்பங்களை உருவாக்க சவூதி அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க AI எவ்வாறு உதவும் என்பதை ஆராய்வதற்காக, உலகளாவிய தலைவர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை ரியாத்திற்கு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்' என்றுள்ளார்.

GAIN 2024 உலகளாவிய செயற்கை நுண்ணறிவு, புத்தாக்கத்திற்கான ஊக்கியாக இருக்கும் அதேநேரம் பங்கேற்பாளர்களுக்கு 120க்கும் மேற்பட்ட அமர்வுகளில் ஈடுபடவும், தொழில்துறை முன்னோடிகளுடன் உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், உச்சி மாநாட்டின் போது அறிவிக்கப்படும் புரட்சிகரமான செயற்கை நுண்ணறிவு கூட்டுமுயற்சிகளுக்கு பங்களிக்கவும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும். மேலும் இம்மாநாட்டின் போது SDAIA மற்றும் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இடையே பல ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவும், அறிவிப்புகள் வெளியிடப்படவும் உள்ளன.




**காலித் ஹமூத் அல்கஹ்தானி...**
இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர், கொழும்பு


# இலங்கையை சுற்றி நடந்து சாதனை படைக்கும் பேருவளை ஷஹ்மி ஷஹீத்



உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் அலாதியான விஷேட ஆற்றல்களுடன் தான் பிறந்து வளர்கிறான். தன்னகத்தே கொண்டுள்ள அத்தகைய ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் போதுதான் அம்மனிதன் சாதனையாளனாகிறான். அவரை நாடும், சர்வ தேசமும் போற்றிப் புகழவே செய்கின்றன.

அந்த வகையில் சுய முயற்சியோடும், நலன் விரும்பிகளது அனுசரணையோடும் சாதனை ஒன்றை நிலைநிறுத்த முன்வந்திருக்கிறார் பேருவளையைச் சேர்ந்த ஷஹ்மி ஷஹீத். இவர் கிட்டத்தட்ட ஐம்பது நாட்களில் சுமார் 1500 கிலோ மீற்றர் தூரத்தை நடை பவனியாக சென்று நிறைவு செய்வதே இவரால் மேற்கொள்ளப்படவுள்ள சாதனையாகும். இது இலங்கை பிரஜை ஒருவரால் மேற்கொள்ளப்படும் முதலாவது சாதனை முயற்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் கரையோர வழியாக முழு நாட்டையும் சுற்றி வருவதே இவர் மேற்கொண்டுள்ள சாதனை முயற்சியாகும். சாதனையாளர் பேருவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால், வரலாற்றில் பல தடங்களைப் பதித்து பேரும் புகழும் பெற்றுள்ள பேருவளைக்கு மற்'றொரு பெருமை சேர்க்கிறார் ஷஹ்மி. அரேபியர்களின் வர்த்தக தொடர்போடு, இலங்கையில் முஸ்லிம்களின் ஆரம்பக்குடியேற்றம் பேருவளையில் இடம்பெற்றது. யெமன் தேசத்தின் இளவரசர் சுல்தான் ஜெலாலுத்தீனின் வருகையால், இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ரார் அமையப்பெற்றது.

இதே போன்று, இரத்தினக்கல் வர்த்தகமும், காலத்திற்கு காலம் தோன்றும் கொடைவள்ளல்கள், சமூக கலை, கலாசாரம், கட்டிடக் கலைஞர்கள், விளையாட்டு என பல்துறை சார் சாதனையாளர்களின் பங்களிப்புகள் என்று பேருவளை உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் புகழ் பூத்துக்குலுங்கும் பிரதேசமாகத் திகழ்கிறது. இப்போது ஷஹ்மியின் சாதனையால் பேருவளை மேலும் பெருமை கொள்கிறது.

தனது 25 ஆவது வயதில் இச்சாதனை முயற்சியை கடந்த ஜுலை மாதம் 13 ஆம் திகதி பேருவளையில் ஆரம்பித்த ஷஹ்மி, இந்த நடைபவனியை காலி வீதியூடாக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகலை, கிழக்கிலங்கையின் பொத்துவில், அம்பாறை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, கல்முனை, திருகோணமலை, வவுனியா, முல்லைதீவு, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, மொரட்டுவை, பாணந்துறை, களுத்துறை வழியாக கால்நடையாகவே பயணித்து இன்று பேருவளையை வந்தடைகிறார். இவருக்கு பேருவளையில் இன்று மகத்தான வரவேற்பும் அளிக்கப்படுகிறது.

**பீ.எம் முக்தார்...**

# பாடசாலை விழுமியக் கல்வியில் பிரத்தியேக வகுப்புகளினால் ஏற்படும் தாக்கம்

இலங்கையில் 1945இல் இலவசக்கல்வி அறிமுகப்பட்டது. ஏழை, பணக்காரன், இனம், மதம் என்ற பேதமின்றி எல்லா மாணவர்களுக்கும் சமத்துவமான கல்வியை பாடசாலைகள் ஊடாக வழங்க வேண்டுமென்பதே இக்கல்வியின் நோக்கமாகும்.

குழந்தையொன்று தான் பிறந்த சூழலில் இருந்து குறிக்கப்பட்ட காலத்தில் கல்விக்கென பாடசாலை சூழலில் பிரவேசிக்கிறது. அங்கு விழுமிய கல்வி பல வடிவங்களில் போதிக்கப்படுகின்றது. அதன் ஊடாக 'மாணவர்கள் விழுமியங்களை புரிந்து கொள்வதோடல்லாமல் அவர்களின் மனப்பான்மை, நடத்தை மற்றும் வாழ்க்கை ஒழுக்கநெறிகளில் அவை பிரதிபலித்தலும் தலையாய கடமையென எதிர்பார்க்கப்படுகிறது.

என்றாலும் பாடசாலை விழுமியக் கல்வியை வியாபாரமாக்குகின்ற நிலை அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பிரத்தியேக வகுப்புகளின் தாக்கம் யாவரும் அறிந்த விடயமாக உள்ளது. படித்த வர்க்கத்தினரை விட பணக்கார வர்க்கத்தினருக்கு கல்வி முதலீடாக தக்க வைக்கப்படுகின்றது. இதனையே 'பணம் பாதாளம் வரை பாயும்' என்ற மூத்தோர் முதுமொழி எடுத்துக்காட்டுகிறது.

ஆரம்பக்காலத்தில் குருவின் இல்லம் தேடிச் சென்று கல்வியை கற்கும் மாணவர்களுக்கு ஒழுக்கமே கல்வியாகப் போதிக்கப்பட்டது. இதன் போது விழுமிய கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டது. ஆனால் இன்று கல்வியை தீர்மானிப்பது 'மாணவர்களின் நிதி' நிலை என்றால் அது மிகையாகாது.

குருகுலக்கல்வி முறையில் ஒழுக்கமானவர்கள் மட்டும் தான் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற கட்டாய நிலை காணப்பட்டது. ஆனால், தற்காலத்தில் பணம் இருந்தால் எங்கும் படிப்பு என்கின்ற மாறுபட்ட சிந்தனை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. அதாவது பணமிருந்தால் எங்கு வேண்டுமானாலும், யாரிடம் வேண்டுமானாலும் கல்வி கற்கலாம் என்கின்ற சிந்தனை மாணவர்கள் மத்தியில் வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கு பிரத்தியேக வகுப்புகளின் தாக்கம் தான் காரணம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.



அண்மைக்காலமாக பாடசாலை கல்வியை விடவும் பிரத்தியேக வகுப்புகளுக்கு பெரும்பாலான மாணவர்கள் அதிக நாட்டம் காட்டுகின்றனர். இதுவே பாடசாலை விழுமியக் கல்வியின் தாக்கத்திற்கான அடித்தளமாக அமைகிறது. ஆனால் பிரத்தியேக வகுப்புக்கள் மாணவர்கள் மத்தியில் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியனவாக அமைவதும் அவதானிக்கப்படுகிறது. குறிப்பாக பாடசாலை விதிமுறைகளை புறக்கணித்தல், பாடசாலை வகுப்பு கல்வியில் நம்பிக்கை இழத்தல், தவறான பழக்கவழக்கங்களுக்கு உள்ளாதல், நடத்தை பிறழ்வு அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இவை பாடசாலை விழுமியக் கல்விக்கு பாதகமதானவையாகும்.

பொதுவாக பாடசாலை என்பது தனித்துவமான நிறுவனக்கட்டமைப்பை கொண்டிருக்கும். சட்டதிட்ட நீதி நெறிமுறைகள் படி இயங்கும் நிறுவனமாக அவை இருக்கும். இத்தகைய தனித்துவம் மிக்க ஏற்பாடுகள் மீறப்படும் போது பாடசாலைக்கல்வியில் தாக்கம் ஏற்படும். குறிப்பாக பாடசாலை ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்காமை, வகுப்பறையில் ஆசிரியரின் கற்பித்தலின் போது பாடங்களை புறக்கணித்தல், சமவயது குழுவினரின் எதிர்மறைத் தாக்கங்களுக்கு உள்ளாதல், பாடசாலை ஆசிரியரின் கற்றல், கற்பித்தல் முறைகளை குறைத்து மதிப்பிடல், பாடசாலை வரவில் சடுதியான வீழ்ச்சி, போதைப்பொருள் பாவனை போன்ற சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடல், பாலியல் துஷ்பிரயோகம் என்பன சுட்டிக்காட்டத்தக்கவையாகும். இவை பாடசாலை விழுமியக் கல்வியில் ஏற்படும் தாக்கங்களாகவே அமையும்.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நன்மையானவை எனக் கூறினாலும் அதில் நன்மை மாத்திரம் தான் உள்ளது என்று கூறுவதற்கில்லை. இன்றைய பிரத்தியேக வகுப்புகளில் பெரும்பாலானவை கற்றல் செயற்பாடுகளை முதன்மைப்படுத்தியவையாக இல்லை. பிரத்தியேக வகுப்பு மாணவர்களின் மத்தியில் சுயகௌரவத்தை தூண்டுகின்றது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் எந்த மாணவர் சிறந்த புள்ளிகளை பெறுகிறாரோ அந்த மாணவர் பிரத்தியேக வகுப்பு மட்டும்தான் காரணம் என்று கூறுகின்றனர். ஆனால் அந்த மாணவரால் பரீட்சையில் மாத்திரம் தான் புள்ளிகளை பெற முடியும். ஒழுக்கத்தில் அவருடைய நிலை பூச்சிய நிலையிலேயே இருக்கும்.

ஒருவரிடம் எவ்வளவுதான் கல்வியறிவு இருந்தாலும் அவரிடம் சீரான ஒழுக்கம் இல்லையேல் அவரை உலகம் உதறித் தள்ளிவிடும். இதை 'மயிர் நீப்பின் வாழாக்கவரிமான் அண்ணார் உயிர் நீப்பர் மானம் வரின்' என ஒழுக்கக்கல்வியின் அவசியத்தை ரேமண்ட் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார்.

ஒரு மாணவன் எவ்வளவு தான் கல்வியில் சிறந்து விளங்கினாலும் அதை ஒழுக்கத்துடன் கற்றால் மாத்திரமே அவனால் தன்னடக்கத்தை கடைபிடித்து வாழமுடியும். இதனை திருவள்ளுவர் 'பரிந்தோம்பித் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை' என குறிப்பிடுகின்றார். அதாவது எந்தசூழ்நிலையிலும் ஒழுக்கத்தை போற்றி காக்க வேண்டும் என்றும் பலவும் ஆராய்ந்து அதன் மூலம் தெளிவான சிந்தனையை பெற்று ஒழுக்கமே உயிருக்கு சிறந்த துணை என்று கூறுகின்றார்.

ஆகவே மனித விழுமியக்கல்வியில் பிரத்தியேக வகுப்பு கல்வி தாக்கத்தை ஏற்படுத்தினாலும் அதனை சாதகமான தாக்கமாக மாற்றியமைக்க ஆசிரியர்களாலும் பாடசாலைகளாலும் தான் முடியும் என்பதை மறந்துவிடலாகாது.


**அழகுராசா நிபுஜிதா...**
இரண்டாம் வருடம் கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி, கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைகழக்கம்.


# நாகப்பட்டினம் காங்கேசன்துறை கப்பல் சேவை

IndSri Ferry Services Limited தனது புதிய கப்பல் சேவையை ஓகஸ்ட் 16 ஆம் திகதியன்று ஆரம்பித்ததது. சிவகங்கை என்ற கப்பல் நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு நான்கு மணி நேர பயணத்தின் பிறகு காங்கேசன்துறையை வந்தடைந்தது. மறுநாள் திரும்பும் பயணம் திட்டமிடப்பப்பட்டது. இருப்பினும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி ஆரம்பித்து, நாகப்பட்டினத்தில் இருந்து காலை 8:00 மணிக்குப் புறப்பட்டு அதே நாளில் பி.ப 2:00 மணிக்கு காங்கேசந்துறையிலுருந்து திரும்பும். 30 சதவீத திறனில் இயங்கும் கப்பல், அதன் முதல் பயணத்தில் சுமார் 41 பயணிகளை ஏற்றிச் சென்றது. சேவை ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்கள் என்ற குறுகிய கால அறிவிப்பு விடுக்கப்பட்ட போதும் தொழில்நுட்ப மற்றும் சட்ட சிக்கல்களால் தடங்கல்கள் ஏற்பட்ட போதும் நிர்வாக பணிப்பாளர் நிரஞ்சன் நாதகோபாலன் பயணிகளின் எண்ணிக்கை குறித்து திருப்தி தெரிவித்தார்.



கப்பல் சேவையானது ஒன்லைன் டிக்கெட் முன்பதிவு மற்றும் செக்இன் சேவைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. கொழும்பு மற்றும் வடக்கு மாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி இலங்கை மென்பொருள் நிறுவனமான Designsoft Technologies இனால் உருவாக்கப்பட்ட இந்த கிளவுட் அடிப்படையிலான தீர்வுகள் இதனை சாத்தியமாக்கியுள்ளது. இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் கணக்குகளை பராமரிப்பதற்கான தேவைகள், அறிவிப்பு வெளியான 10 நாட்களுக்குள் இணைய அடிப்படையிலான இயங்குதளம் மற்றும் அண்ட்ராய்டு மற்றும் ஐ.ஒ.எஸ் பயன்பாடுகள் மூலம் விற்பனையை மென்பொருள் செயல்படுத்தியது.

சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கைப் பிரஜையான நிரஞ்சன், 'பொதுவாக, நிறுவனங்கள் கணினி மேம்பாட்டிற்காக இந்திய மென்பொருள் நிறுவனங்களைப் பயன்படுத்துகின்றன. எவ்வாறாயினும், ஒரு இந்திய நிறுவனமாக இருந்தபோதிலும், 45 வருட அனுபவமுள்ள நிபுணரின் தலைமையில் இலங்கை நிறுவனமான Designsoft Technologies உடன் இணைந்து, பயணச்சீட்டு, செக்இன் மற்றும் கணக்கியல் மற்றும் இரு நிறுவனங்களின் வரி அதிகாரிகளிடம் புகாரளித்தல் ஆகியவற்றிற்கான முழு அமைப்பையும் உருவாக்க முடிவு செய்துள்ளோம். மென்பொருளின் தரம் மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.



இச்சேவையில் ஒருவழிப் பயணத்தின் செலவு 50 அமெரிக்க டொலராகும். காலை 8:00 மணிக்குப் புறப்பட்டு மதியம் 2:00 மணிக்கு காங்கேசந்துறையிலிருந்து திரும்பும் இந்த தினசரி சேவைக்கு 15,000 இலங்கை ரூபா அறவிடப்படுகின்றது. நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசந்துறை வரையிலான பயணத்திற்கு இந்தியாவில் கூடுதலாக 18 சதவீதம் ஜி.எஸ்.டி விதிக்கப்படுகிறது. சிறிய துறைமுகக் கட்டணங்கள் இந்தியாவில் தள்ளுபடி செய்யப்படுகின்றன. காங்கேசந்துறையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு திரும்பும் பயணத்திற்கு கூடுதல் 5 அமெரிக்க டொலர் துறைமுகக் கட்டணம் விதிக்கப்படுகிறது.

## மானுடவியல்



178

பிள்ளையார் வேதத்தை வளர்த்தற்கும் சைவத்தை விளக்குதற்கும் எழுந்து வேதாரணியேசுரரை மீண்டும் போய் நமஸ்கரித்துப் பாடித் துதித்து, அநுஞ்ஞை பெற்றுக்கொண்டு புறப்பட்டு, அப்பமூர்த்தி மாறாதவண்ணம் அவரை வணங்கி விடை கொடுத்து நீங்கி, முத்துச் சிவிகையில் ஏறி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதி, சுவாமியுடைய விபூதியணிந்த திருமேனியைச் சிந்தித்துக் கொண்டு சென்றார். திருவகத்தியான் பள்ளி, கோடிக்குழகர் கோயில், திருக்கடிக்குளம், திருவிடும்பாவனம், திருவுச்சாத்தானம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, சோழநாட்டைக் கடந்து, பாண்டிநாட்டை அடைந்து, திருக்கொடுங்குன்றத்திற் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, மதுரைக்குச் சமீபித்தார். அது நிற்க.

எட்டு மலைகளிலும் வசிக்கின்ற சமணர்களெல்லாரும் துர்நிமித்தங்களும் துர்ச்சொப்பனங்களும் கண்டு, மதுரையிலே ஒருங்குவந்து கூடி, தாந்தாங் கண்ட சொப்பனங்களை ஒருவருக் கொருவர் சொல்லி, பாண்டியராஜனுக்குந் தெரிவித்து, தங்களுக்குத் தீங்கு விளைவது திடமெனக் கருதி, உணவின்றிக் கவலை கொண்டிருந்தார்கள். சைவர்களாகிய பாண்டிமாதேவியாரும் குலச்சிறைநாயனாருமோ அளவில்லாத மகிழ்ச்சியைக் காட்டுகின்ற நன்னிமித்தங்களைக் கண்டு, சமணசமயங் குன்றிச் சைவசமயம் விருத்தியாதல் திடமெனக்கருதி, மகிழ்ந்திருந்தார்கள். இருக்கும் பொழுது, "சர்வலோகங்களும் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எழுந்தருளி வருகின்றார்" என்று சிலர் அவர்களுக்குப் போய்ச் சொன்னார்கள். மங்கையர்க்கரசியார் அதைக்கேட்டு அவ்வார்த்தையைச் சொல்லியவர்களுக்கு அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து, எல்லையில்லாத மகிழ்ச்சியுடையராகி, தம்மை வணங்கி நின்ற குலச்சிறை நாயனாரை நோக்கி "நமது தம்பிரானாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை எதிகொள்ளும்" என்றார். குலச்சிறைநாயனார் பாண்டிமாதேவியாரை வணங்கிப் போந்து, "அரசனுக்கும் உறுதியே" என்று விரைந்து மதுரைக்குப் புறத்திலே போய், பிள்ளையாரை எதிர்கொள்ளுதற்குச் செல்ல; பாண்டிமாதேவியாரும், தம்முடைய பரிசனங்கள் சூழ, ஆலயத்திற் சென்று, சொக்கநாதசுவாமியை நமஸ்கரித்து, பிள்ளையாருடைய நல்வரவை ஏற்று நின்றார்.

ஆருகதம் பௌத்தமுதலிய பரசமயவிருளை நீக்குகுன்ற ஞானாதித்தராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி என்னும் நால்வகை வாத்தியங்களும் ஒலிக்க, எண்ணிறந்த பிராமணர்கள் உதாத்த அநுதாத்த ஸ்வரிதப் பிரசயங்களோடு வேதகோஷஞ் செய்ய, அடியார்கள் ஹரஹர என்று சொல்லும் ஓசையினாலே திக்குகளெல்லாஞ் செவிடுபட, செந்தமிழ்மாருதமாகிய தென்றல் எதிர்கொண்டு எம்மருங்குஞ் சேவிக்க, விபூதியைத் தரித்த திருமேனியுடைய திருக்கூட்டம் சர்வலோகத்தாருஞ் செய்த சிவபுண்ணியங்களின் படையெழுச்சிப் போலப் பொலிந்து விளங்க, சமணசமயம் பாழ்பட, சைவசமயம் தழைத்தோங்க, தம்முடைய திருநாமங்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச் சின்னங்களெல்லாம் "பரசமய கோளரி வந்தார். பரசமய கோளரி வந்தார்."



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## உலகெங்குமுள்ள பக்தர்களால் பக்திபூர்வமாக கொண்டாடப்படும் கிருஷ்ண ஜன்மாஷ்டமி

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த நன்னாள் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா, ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழா இம்மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் உலகெங்குமுள்ள பக்தர்களால் கொண்டாடப்படுகிறது.

'பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம் தர்ம சம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே'

இந்த அற்புத வார்த்தைகள் பகவான் கிருஷ்ணரால் பகவத் கீதையில் சொல்லப்பட்டவை. அதாவது எப்பொழுது எங்கு தர்மம் தலை சாய்ந்து அதர்மம் தலையோங்குகிறதோ அப்பொழுது அங்கு அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட நான் யுகம் தோறும் அவதரிக்கிறேன் என்று பகவான் கிருஷ்ணர் கூறுகிறார்.

குருசேத்திர போர் ஆரம்பிக்குமுன்னர் பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு போதித்தவைதான் பகவத்கீதையாக நம் கரங்களில் தவழ்கின்றன. தர்மத்துக்குப் புறம்பாக பல அநியாயங்கள் செய்துவந்த கம்சனை அழிக்கும்படி பிரம்மாவிடம் முறையிட்டார் பூமாதேவி. திருமால் கிருஷ்ணாவதாரம் எடுத்து தர்மத்தை நிலை நிறுத்துவார் என அவருக்கு வாக்குறுதி அளிக்கிறார். வசுதேவருக்கும் தேவகிக்கும் எட்டாவது குழந்தையாக கண்ணனை பிறக்க வைத்து தன் வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்.

வசுதேவருக்கு பிறக்கும் எட்டாவது குழந்தையால் கம்சனுக்கு மரணம் நிகழும் என்று வானத்திலிருந்து ஒரு அசரீரி கூற அதனால் அச்சமுற்ற கம்சன் தேவகியை கொல்ல முயன்றபோது அதனை தடுக்கிறார் வசுதேவர்.



தனக்குப் பிறக்கும் பிள்ளைகளை அவனிடமே ஒப்படைத்து விடுவதாக வாக்களிகிறார். அதனையடுத்து அவர்களை சிறையில் அடைத்து கண்காணித்து வந்தான் கம்சன். தேவகிக்கு பிறந்த ஆறு குழந்தைகளையும் சிறிதும் இரக்கமின்றி கொன்று விடுகிறான் கம்சன். ஏழாவதாக கருவுற்றதும் திருமால் மாயை என்ற பெண்ணைப் படைத்து தேவகியின் வயிற்றிலுள்ள ஏழாவது சிசுவை வசுதேவரின் முதல் மனைவியான ரோகிணியின் வயிற்றில் சேர்த்துவிடுகிறார்.

'நீ நந்தகோபனின் மனைவி யசோதையின் வயிற்றில் கருவாக இருக்க வேண்டும்' என்கிறார். அதன்படியே மாயை செய்ய தேவகிக்கு ஏழாவது கர்ப்பம் கலைந்து விட்டதாக பேச்சு எழுந்தது. கம்சனும் நம்பி விட்டான். அந்தப் பிள்ளை ரோகிணியின் வயிற்றில் பிறந்தது. அவரே பலராமன்.

தேவகி எட்டாவதாக கருவுற திருமால் அவள் வயிற்றில் கருவானார். ஆவணி மாதம் தேய்பிறை அஷ்டமியன்று கிருஷ்ணா பிறந்தார். தன்னை நந்தகோபன் மனைவி யசோதையிடம் சேர்த்துவிட்டு அவளுக்கு பிறந்த பெண்குழந்தையை கொண்டுவந்து கம்சனிடம் ஒப்படைக்குமாறு பகவானே அவர்களுக்கு அருள் வாக்களித்தார். அதன்படி வசுதேவர் குழந்தைக் கிருஷ்ணரை தூக்கிக்கொண்டு செல்கையில் கடும் மழையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க ஆதிசேஷன் துணையாகச் செல்கிறார். கோகுலத்தில் யசோதையின் அருகில் குழந்தை கிருஷ்ணரை கிடத்திவிட்டு அங்கிருந்த பெண் குழந்தையை எடுத்து வந்தார் வசுதேவர்.

மயக்க நிலையில் இருந்த யசோதைக்கு இது தெரியாது. அந்த பெண் குழந்தையை கொல்வதற்கு கம்சன் வந்தான். ஆனால் அது அவன் கைகளில் இருந்து விடுபட்டு வானில் எழுந்து எட்டு கைகளிலும் ஆயுதம் ஏந்தி; 'துர்க்கையான என்னை உன்னால் கொல்ல முடியாது. உன்னைக் கொல்லக் கூடியவன் ஏற்கனவே கோகுலத்தில் பிறந்து விட்டான்';; என்று கூறி மறைந்தது. பின்னர் கிருஷ்ணர் வளர்ந்து கம்சனை வதம் செய்கிறார்.

கிருஷ்ண பகவான் அவதரித்த இந்த நாளில் அவருக்கு பிடித்த உணவுப் பொருட்களை செய்தும் கிருஷ்ணரை நன்றாக அலங்கரித்தும் அவரை தங்கள் இல்லங்களுக்கு வரவழைக்கும் முகமாக குழந்தையின் கால் பாதங்களை வரைந்தும் பக்தர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். கிருஷ்;ணர் கோவில்களில் பூஜை, பஜனை, சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

அந்தவகையில் கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீராதாகிருஷ்;ணா ஆலயத்தில் இம்மாதம் 26ஆம் 27ஆம் திகதிகளில் விசேட வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திங்கட்கிழமை 5.30க்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் தொடர்ந்து துளசி ஆரத்தி, தர்சன ஆரத்தி, குரு பூஜை, குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரிச் சங்கினால் பால் அபிஷேகம், ஆராதனை, ராஜபோக ஆரத்தி, தூப ஆரத்தி, துளசி ஆரத்தி, சந்திய ஆரத்தியைத் தொடர்ந்து குழந்தைக் கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.



இரவு 11.00 மணிமுதல் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், விஷேட ஆராதனைகளும், நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும். 27ஆம் திகதி செவ்வாயன்று நண்பகல் 12.00 மணிக்கு ஸ்ரீவியாச பூஜை நடைபெறும். அன்றைய தினம் மாலை 6.30க்கு சந்தியா ஆரத்தியைத் தொடர்ந்து ஹரே கிருஷ்ணா இசைநாட்டியக்கல்லூரி மாணவ மாணவிகள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அபிஷேகத்துக்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள், மற்றும் அன்னதானத்திற்கு வேண்டிய சகல பொருட்களையும் பக்தர்கள் வழங்கலாம்.

கிருஷ்ணப்பிரியன் ஆர். ராஜலிங்கம்




## முன்னேஸ்வரம் தீர்த்த உற்சவம்





சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் தீர்த்த உற்சவம் சிலாபம் மாயவனாறு (தெதுருஓயா) தீர்த்தக்கரையில் அண்மையில் இடம்பெற்றது. (உடப்பு குறூப் நிருபர்)

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 100



மனிதனோ அல்லது மற்ற உயிரினங்களோ கடவுளின் வடிவங்களே. உண்மையில் உயிருக்கு வடிவம் இல்லை. பரமாத்மாவே பல வடிவங்களில் உலவுகின்றார். உயிர் உணர்வு என்னும் கற்பனை, மாயையில் இருக்கும் வரை தனது சக்தி, சாமர்த்தியம் துச்சமாகத் தான் இருக்கும். கடவுள் மீது நாம் கொள்ளும் பக்தியினால் தான் எச்செயலும் பெருமை மிக்கதாக உணரப்படும் ஒரு புழு பரிணாம வளர்ச்சியடைந்து ஒரு வண்டாக மாறும் வரை பல தடைகளை, இடைஞ்சல்களை சந்திக்க வேண்டி இருக்கும். ஆரம்பத்தில் கடினமாகவும், இயலாது போல தோன்றினாலும் இறுதியில் வளர்ச்சி என்பதை அடைந்தே தீரும். ஆரம்பத்தில் அந்தப் புழுவானது சுயநலம். மோகம் போன்ற மாயவலையில் சிக்கிக் கொண்டிருக்கும்.

அந்த மாயவலையிலிருந்து விடுபட்ட பின்னரே தான் அந்தப் புழு வண்டாக உருமாறும். அது போல் மனிதனும் தன் அஹம்பாவத்தை விட்டு சாத்திய வழியில் தொடர்ந்து பயணித்தால் கடவுளின் அனுக்கிரஹம் பெறலாம். ஆரம்பக் கட்டத்தில் குறுகிய எண்ணத்துடன் இருக்கும் மனம் அஹங்காரத்தை விட்டுவிடும் போது மனம் விசாலமடைந்து சர்வ சக்தி படைத்தவனாக மனிதன் மாறி விடுகிறான். பின் மனிதன் தன்னுள் தெய்வீகத் தன்மையைக் காண்கிறான். உயிரணுக்கள் விஸ்தாரமடைந்து அஹம் ப்ரஹ்மா நானே கடவுள் என்ற நிலையில் சக்தி பெறுகிறான்.

உலகத்தில் சுகம், வளம் யாவற்றையும் வழங்கவல்ல இறைவவன் மீது பக்திகொண்டு தெய்வீக வழி சென்று தெய்வீக ஆற்றல் பெறும்போது வாழ்க்கை வளமாகும் என்பது திண்ணமே.

ஒவ்வொரு நிகழ்வுகளிலும் உன்னை நீயே உணர்ந்து கொள். ஆத்மசக்தி அடையும் நேரம் வந்ததும், கடவுளை அறிவது எளிதாகி விடும். இறைவனை அடையும் நேரம் ஏற்படும். அதே ஆனந்தம் நம்பிக்கையுடன் ஒரு செயலில் இறங்கும் போதும் ஏற்படும். தன்னிடம் மறைந்துள்ள சக்தியை உணராமல் ஒருவன் சக்திமான் ஆக முடியாது. எவன் ஒருவன் தன்னை உணர்கிறானோ தன் சக்தியை வெளிப்படும் முயற்சியில் தொடர்கிறானோ அவன்தான் நினைத்தப்படி அதுவாகவே மாறிவிடுவான். சித்திகளில் எல்லாம் மிக உயர்ந்தது தன்னை உணர்வதே ஆகும்.

இலட்சத்தில் ஒரு சிலரே தன்னை உணர முற்படுவர். அவர்களில் ஒரு சிலரே தொடர் முயற்சியில் ஈடுபடுவர். அவர்களில் ஒரு சிலரே கடவுளை அடைவர். மனித உடலிருந்து பிறப்பெடுத்தவர்களில் ஒரு உணர்ந்துள்ளனர்.

மனிதன் உடலில் காமம், கோபம், மோகம், சந்தோஷம். தண்டனை. தயவு. தாட்சன்யம் ஆகிய அனைத்து உணர்வுகளும் உள்ளன. அவைகளே ஆனந்தத்திற்கு காரணமாகவும் அந்த ஆனந்தத்தை பெறுவதில் ஏற்படும் தடைகளாகவும் எதிரும் புதிருமாக விளங்குகின்றன. அனைவருக்கும் ஆனந்தம் அடிப்படை, ஆனந்தமே இலட்சியம், இலட்சியத்தை அடைவது என்பது ஆத்மாவிலேயே அடங்கியுள்ளது. எவன் ஒருவன் ஆத்மா வழி நடந்து தன் ஆத்மாவை பகுத்து அறிகிறானோ அவன் தான் நினைத்ததை நினைத்தப்படி அடைந்து விடுவான். பரமாத்மாவின் அம்சமே ஆத்மா. எனவே ஆத்ம ஞானம் (தன்னை அறிதல்) அடைந்தவனுக்கு கடவுளை அடைவது மிக எளிதாகி விடும்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20207) சிலரிடம் வலியச் சென்று நாமே பேசத் தொடங்குகிறோம். உங்களை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே? நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று நம்மையறியாமலேயே கேள்விக்கணைகளைத் தொடுக்கத் தொடங்குகிறோம். எல்லாவற்றிற்கும் காரணம் என்ன?**

தோற்றப் பொலிவுதான் காரணம் என்கிறது சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம்.

**20208) அங்க அமைப்புகளை வைத்து ஒருவருடைய எண்ணங்களை யூகிக்க நாம் முயற்சிக்கின்றோம். அந்த யூகம் ஓரளவேனும் சரியாக இருப்பதால் என்ன செய்கிறார்கள்?** சாமுத்ரிகா லட்சண சாஸ்திரத்தைப் பலரும் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துகிறார்கள்.

**20209) மூக்கு நீண்டு இருப்பவர்கள், கிளி மூக்குத் தோற்றத்தில் அமைந்தவர்கள் எப்படி இருப்பார்கள்?** மிகுந்த புத்திக் கூர்மையுடையவர்களாகவும், ராஜதந்திரிகளாகவும் இருப்பார்கள் என்கிறது இந்த சாஸ்திரம்.

**20210) ஒருவரது தலை வட்ட வடிவமாக இருந்தால் என்ன நடக்கும்?** அவருக்கு சகல செல்வங்களும் கிடைக்கும்.

**20211) நரம்புகள் புடைத்துக்கொண்டு தென்பட்டால்...?** அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும்.

**20212) உடம்புக்கு ஏற்ற விதத்தில் அளவான தலை இருந்தால்?** ராஜயோகம் பெற்றவர்களாக விளங்குவர். வளம் பெற்றவராக இருப்பார்கள். அதைப்பார்த்து பணக் குழி விழுகின்றது என்பார்கள். அவர்களுக்கு வாய்த்த பிள்ளைச் செல்வங்களாலும் பெருமைகள் வந்து சேரும்.

**20213) சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம், ஒருவருடைய முகம் அழகாகவும், பிரகாசமாகவும் இருந்தால்...?** அவருக்கு அரசருக்கு இணையான வாழ்க்கை அமையும்.

**20214) பரந்த முகமாக இருந்தால்...?**

யோகியாகும் வாய்ப்பு கிட்டும்.

**20215) நீண்ட முகத்தைப் பெற்றவர்கள்...?**

பொருளாதாரப் பற்றாக்குறையில் சிக்கித் தவிப்பார்கள்.

**20216) சதைப்பிடிப்பான முகத்தைப் பெற்றவர்கள்...?**

சுகங்களையும், சந்தோஷங்களையும் அதிகமாக அனுபவிப்பார்கள்.

**20217) ஏறு நெற்றியாக இருந்தால்?**

ஆயுள் தீர்க்கமாக இருக்கும்.

**20218) இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் பள்ளம் இருக்கக்கூடாது என்கிறது சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம். அப்படி இருந்தால் என்ன?** வறுமை தாண்டவமாடும்.

**20219) இரண்டு புருவங்களும் ஒன்றாக இணைந்திருந்தால் என்ன?** ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

**20220) ஒன்றை ஒன்று தொடாமல் வில்லைப்போல் வளைந்திருந்தால்?** பெரிய செல்வந்தர்களாக விளங்குவர்.

## வசியத்தில் இருந்து தப்பிக்க குங்குமம் வைங்க...

இந்திய கலாச்சாரத்தில் பெண்கள் குங்குமப்பொட்டு வைத்துக்கொள்வது மங்களகரமானதாக கருதப்படுகிறது. அது அழகுத் தொடர்பானதும் கூட. மஞ்சளால் உருவாக்கப்பட்ட தூய்மையான குங்குமத்தை தான் வைத்துக்கொள்ள வேண்டும். குங்குமத்தை கழுத்தில் உள்ள கண்டம், புருவத்தின் இடைப்பகுதி, நெற்றியின் உச்சி போன்ற இடங்களில் வைத்துக்கொள்வார்கள். அப்படி பொட்டு வைப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

**வசியத்தில் இருந்து தப்பலாம்**

வசியம் என்பது ஒரு கலை. இந்நாளில் மெஸ்மரிசம், ஹிப்னாடிசம், போன்றவை வழக்கத்தில் உள்ளன. மற்றவர்களை வசியப்படுத்தும்போது தம் பார்வை ஆற்றலை செலுத்த கண்டம், புருவத்தின் இடைப்பகுதி, வகிட்டு நுனி, கழுத்தின் பின்பகுதி ஆகிய இடங்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

கழுத்தின் பின்பகுதி சடையால் மறைக்கப்படுகிறது. ஏனைய பகுதிகளில் பொட்டு வைத்துக்கொள்ளும் பழக்கம் உள்ளது. இதில் புருவ இடைப்பகுதி மிக முக்கியமாகும். இந்த இடத்தில் பொட்டு வைத்துக்கொண்டவர்களை அவர்கள் சம்மதம் இன்றி, எவராலும் ஆழ்நிலைக்குக் கொண்டு செல்ல முடியாது, வசியப்படுத்த முடியாது.

**யோகசாஸ்திரம் கூறும் உண்மை**

மூலாதாரம் என்று சொல்லப்படும் பகுதியில் இருந்து பிறக்கும் உள் ஒளி கண்டத்தில் தங்குகிறது. அவ்வொளி கபாலம் மூலம் புருவ மத்திக்கு வருகிறது. அகவொளி நிலைக்கும் இடங்களைப் பொட்டு வைத்து புலப்படுத்துவதாக சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

பெண்கள் அனைவரும் பொட்டு வைத்துக்கொள்ள வேண்டும். திருமணமானவர்கள் என்பதை வித்தியாசப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக வகிட்டில் வைத்துக்கொள்வது மரபு.







கேகாலை பிரதேச ருவன்வெல்ல, வாரக்க, சனிகிரோப்ட் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிராயச்சித்த பாலாலய கும்பாபிஷேக விழா அண்மையில் நடைபெற்றது. "ஜோதிட ஞான பானு" டொக்டர் சிவஸ்ரீ சிவநேசன் சிவாச்சாரியார், தத்புருஷ சிவாச்சாரியார், சிவஸ்ரீ ரவிச்சந்திர குருக்கள் கும்பாபிஷேக குருமணி சிவஸ்ரீ கிருஸ்ணா குருக்கள், சர்வசாதகம் சிவஸ்ரீ தர்ஷன் குருக்கள் ஆகியோருடன் ஆலய முக்கியஸ்தர்களும் இதில் கலந்து கொண்டார்கள். (படங்கள்: எம். நசார்கேகாலை)

## IMF உடன் கலந்துரையாட...

வும், இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். பொருட்களின் விலைகளையும் வரிகளையும் குறைக்க தானும் விரும்புவதாகவும், எனினும், ரூபாயை பலப்படுத்தி, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுவதன் மூலம் மாத்திரமே தன்னால் அதனைச் செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதனைத் தவிர வேறு மாற்றுவழி இருந்தால் உடனடியாக ஐ.எம்.எப் உடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் அதனை சமர்ப்பித்து கருத்தறிந்து கொள்ளுமாறு சஜித் பிரேமதாஸவிடமும் அநுர திசானாயக்கவிடமும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

பிட்டகோட்டையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று பிற்பகல் (25) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இந்த விசேட சம்மேளனத்தில் பெருமளவிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றிய ரணில் விக்ரமசிங்கவிற்கு இலங்கையைக் கட்டியெழுப்பும் பணியை மேற்கொள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கும் அவரின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கும் ஐ.தே.க ஆதரவாளர்களின் உடன்பாட்டை தெரிவிப்பதற்குமான பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவினால் கட்சி சம்மேளனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த பிரேரணையை ஐ.தே.க தேசிய அமைப்பாளர் சாகல ரத்னாயக்க வழிமொழிந்தார். அதனையடுத்து அனைவரும் கைகளை உயர்த்தி ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இதன் போது மறுசீரமைக்கப்பட்ட சிறிகொத்த கட்சி தலைமையகமும் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது.

## 2025 பட்ஜெட்டை தயாரிப்பது...

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,வெகுஜன ஊடகத்தறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதியை வெற்றி பெறச் செய்யும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் பந்துல தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் நாட்டுக்கு மிக முக்கியமான ஒன்றாகும். அந்த வரவு செலவுத் திட்டத்துக்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்கள், பில்லியன் கணக்கான நிதியை அரசாங்கத்துக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

இந்நிதி கிடைக்காது போனால் எதையுமே முன்னெடுக்க முடியாது போகும். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இல்லாவிட்டால், தற்போது சர்வதேச ரீதியில் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டங்கள் நிறுத்தப்பட்டால் இந்த நாட்டை இரண்டு வாரங்களுக்குக் கூட எவராலும் ஆட்சி செய்ய முடியாது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 75 வீத பெரும்பான்மை வாக்குகளால் அமோக வெற்றி பெற்று மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாவார்.

அனுர குமார திசாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு மக்கள் முன்சென்று, வாக்குகளை கேட்பதற்கு எந்த அருகதையும் கிடையாது நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு கிழக்கு மக்கள் ஓரணி திரண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் எனது இராஜாங்க அமைச்சராக இருந்து பெருமளவு நிதியை கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்காக கொண்டு வருகிறார்.

இதன் மூலம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் கிழக்கில் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று கிழக்கில் அதாவுல்லா, சிவநேசத்துரை சந்திரகாந்தன் போன்றவர்கள், ஜனாதிபதிக்கு அமோக ஆதரவளித்து வருகின்றனர்.

செப்டம்பர் 21 இல்,கிழக்கு மக்கள் ஜனாதிபதியை அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மாகாண சபை தேர்தலை...

குறிப்பிட்ட அவர், கிழக்கு மாகாணத்தை முன்னேற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போத, அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கிழக்கு மாகாணம் பத்தாயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. 18 இலட்சம் மக்கள் இந்த மாகாணத்தில் வாழ்கின்றனர். 70 வீதமான மக்கள் விவசாயிகள். பெரும் கடற் பிரதேசத்தை கொண்ட மாகாணம் இது.

எனினும், ஒப்பிடும்போது நாட்டில் 10% விவசாயமே இங்கு இடம் பெறுகிறது. ஆறு வீதமான மீன்பிடி நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றதும், கிழக்கில் விவசாயத்துறையை முன்னேற்றுவது, துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது, மீன்பிடித்துறையை முன்னேற்றுவது தொடர்பில் முன்மொழிவுகளை வழங்கியுள்ளார். இந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும்போது, கிழக்கு மாகாணம் செழிப்பாகும். இங்குள்ள மக்களின் பிள்ளைகள் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. இந்த நல்ல நோக்கத்துடனேயே எமது கட்சி ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்தது.

## விவாதத்துக்கு வருமாறு...

உறுப்பினர் திஸாநாயக்கவுடன் விவாதத்தில் ஈடுபட விரும்புவதாகவும், ஜனாதிபதி தேர்தலில் அவர் தோல்வியடைந்த பின்னர் விவாத்தில் ஈடுபடவிரும்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2019, மே மாதம் வெளியிடப்பட்ட தனது சர்ச்சைக்குரிய அறிக்கையில் அவர் கூறியதன் அர்த்தம் என்ன என்பதை அனுரகுமார திஸாநாயக்க விளக்கமளிக்க வேண்டும் என்றும் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில், எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுக்க தயாராக இருப்பதாகவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தனது நற்பெயருக்கு ஏற்படுத்தியுள்ள களங்கத்திற்காக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமிடம் 200 கோடி ரூபா வழங்கக் கோரி, ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.இது தொடர்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

காத்தான்குடியில் கடந்த ஆகஸ்ட் மாதம் பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் தமிழில் உரையாற்றிய போது, பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்ததாக குறித்தே இந்த கோரிக்கை கடிதத்தை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

2019, மே மாதம் பாராளுமன்றத்தில் அனுரதிஸாநாயக்க தெரிவித்த கருத்தை வேண்டுமென்றே பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் திரிபுபடுத்தி இவ்வாறு தெரிவித்துள்ளதாகவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மனக்காழ்ப்புடனும் துவேஷத்துடனும் மேற்கொள்ளப்பட்ட இந்த உரையின் மூலம் மக்கள் மனதில் தனக்குள்ள மதிப்பை குறைப்பதற்கும், அரசியல் தலைவர் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் என்ற தனது நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் திஸாநாயக்க மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

## போக்குவரத்துச் சங்க...

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்க இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில், ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தைப் பாராட்டிய போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள், நாட்டை முன்னோக்கி கொண்டு சென்று மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே எனவும் சுட்டிக்காட்டினர்.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், மாகாணங்களுக்கு இடையிலான பஸ் உரிமையாளர் சங்கம், பொதுஜன பெரமுன பஸ் சங்கம், கொள்கலன் சங்கம், அலுவலக போக்குவரத்துச் சங்கம், அகில இலங்கை சாரதிகள் தொழிற்சங்கம், அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம், அகில இலங்கை பாடசாலை பஸ் சங்கம், ரயில் நிலைய அதிபர்கள் சங்கம், தேசிய டெக்சி முச்சக்கர வண்டி தொழில் துறையினர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியைச் சந்தித்து தமது ஆதரவை தெரிவித்தனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் ஆராய்ந்து விரைவான தீர்வுகளை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் போக்குவரத்துத் துறைக்கு பெரும் பொறுப்பு இருப்பதாகவும், இந்நாட்டின் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்துக்காக ஒருங்கிணைந்த உள்ளக போக்குவரத்து முறையை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, போக்குவரத்துத் துறையுடன் தற்போதுள்ள நிறுவனக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## தமிழ் பொது வேட்பாளர்...

இருப்பவர்களின் வாக்குப்பலம் எப்போதும் பலனளிக்காது.

ஆனால், பிரதான வேட்பாளர்கள் 03 பிரிவுகளாக பிரிந்திருக்கின்ற போது, அந்த வாக்குப்பலம் மிகவும் பெரிதாக தோற்றமளிக்கும்.

இதுவும் அவ்வாறானதொரு தருணம்தான்.

எங்களுடைய வாக்குப்பலம் வழமைக்கு மாறாக மிகவும் பலமுள்ளதாக வரும் சந்தர்ப்பத்தில்,புறக்கணிப்பது அல்லது வெல்ல முடியாதெனத் தெரிந்துள்ள வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது என்பவை,

கிடைத்துள்ள அரசியல் ஆயுதத்தை உபயோகிக்காமல் விடுவதற்கு ஒப்பானது.இவ்வாறு எம்.ஏ.சுமந்திரன் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

## நாடு வறுமையிலிருந்தாலும்...

முற்றிலும் கடலால் சூழப்பட்டிருந்தாலும் உப்பு இறக்குமதி செய்யும் நிலையில் நாடுள்ளது. எனினும் மஹிந்த, சஷீந்திர, நாமல் மற்றும் ரணில் போன்றோர் செல்வந்தர்களாக உள்ளனர். ரணில் ஜனாதிபதியாகும் போது சாகல ஆலோசகராகிறார். அவரது சகோதரர் இலங்கை வங்கியின் தலைவராகிறார். எனவே ஒருவர் நாட்டை ஆட்சி செய்யும்போது அவரது குடும்பமே பொறுப்புகளை ஏற்கின்றன.

2023 ஆம் ஆண்டு முதல் சுகாதார சேவைக்கு வற்வரி விதிக்கப்படுகிறது. எமது அரசாங்கத்தில் வற் உள்ளிட்ட சகல வரிகளும் நீக்கப்படுமென, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## மக்களை வாழ வைப்பது...

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

பேரரசின் இளைஞர்களின் சத்தியத்தின் அடிப்படையில் தனது ஆசிரியர் வழங்கிய அறிவுரையை இதன்போது நினைவு கூர்ந்த ஜனாதிபதி, தனது ஆசிரியரிடமிருந்து தாம் கற்ற பாடத்தின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் நாட்டைப் பொறுப்பேற்று, பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான சவாலை வென்றெடுக்க முடிந்தது என்றும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

"இந்த மேடையில் எனக்கு ரோயல் கல்லூரியில் கற்பித்த சிவலிங்கம் ஆசிரியர் இருக்கிறார். 13 14 வயதில் அவரிடம் கல்வி கற்றேன். 1961 ஆம் ஆண்டுகளில் நானும் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் அவரிடம் கற்றிருக்கிறோம். எனவே நாட்டை மீட்டெடுத்த பெருமையை அவருக்கும் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்கவும் மலிக் சமரவிக்ரமவும் சிவலிங்கம் ஆசிரியரிடம் கல்வி கற்றுள்ளனர். ஏதென்ஸ் சாம்ராஜ்ஜியத்தில் இளையோரின் எழுச்சி குறித்து ஆசிரியர் எங்களுக்கு கற்பித்தது நினைவிருக்கிறது. அச்சமடைந்த நாட்டுக்குள் மக்கள் நம்பிக்கை இழக்கும் வகையில் செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்தினார். அதனால் தான், 2022 ஆம் ஆண்டில் சவால் மிக்க தருணத்தில் எவரும் ஏற்காத நாட்டை நான் பொறுப்பேற்றேன்.

உங்களுக்காக போராடவும், உங்களுக்கு சலுகை வழங்கவும், அடுத்த தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கவும், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், நாட்டுக்குள் நிலைபேற்றுத் தன்மையை ஏற்படுத்தவும், நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்லவும் என்னால் தலைமைத்துவம் வழங்க முடிந்தது என்பதாலேயே 'இயலும் ஸ்ரீ லங்கா' என்று சொல்கிறோம்.

கஷ்டமான காலத்தில் இந்த பொறுப்புக்களை நான் ஏற்றுக்கொண்டேன். எதிர்க் கட்சித் தலைவருக்கு இந்த ஆசான் கிடைக்கவில்லை. அதனால்தான், சவால்களை ஏற்காமல் அவர் ஓடிவிட்டார். பெரிஸ் ஒலிம்பிக் வரையில் அவர் ஓடி முடித்தார். எதிர்க்கட்சித் தலைவர் மாற்றுப் பிரதமர் ஆவார். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரையும் சார்ந்துள்ளது.

ஆனால் மக்கள் கஷ்டப்படும் போது ஓடி மறைந்து கொண்டார். வரிசைகள் பற்றி யோசிக்கவில்லை, மக்கள் பசியை பற்றி சிந்திக்கவில்லை. அனுர குமாரவும் ஓடி மறைந்து கொண்டார். ஆனால் அன்று இங்கு இருக்கும் அமைச்சர்கள் இருந்தனர். நாம், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினோம். கஷ்டமான பல தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. உள்நாட்டு கடன் பெறுதல் வரையறுக்கப்பட்டது. பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டது. செலவுகளைக் குறைத்து எதிர்கால நடவடிக்கைகளுக்கு வருமானம் தேட வெட் (VAT) வரியை அதிகரித்தோம்.

அவை இலகுவான பணியல்ல. அமைச்சரவையில் பல முறை பேசினோம். மக்கள் கஷ்டங்களை தாங்கிக் கொண்டமைக்கு நன்றி தெரிவிக்கிறோம். 2022 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 13 டொலர் பில்லியன் சரிவைக் கண்டது. எவ்வாறாயினும் எமது முயற்சிகளால் 2023 இல் 08 பில்லியன் டொலர்களினால் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்தோம். இதனால் ரூபாயின் பெறுமதி அதிகரித்தது. அஸ்வெசும நலன்புரித் தொகை வழங்கினோம். இவ்வருடத்தில் 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கவுள்ளோம். சிறுநீரக நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டது.

11 பில்லியன் ரூபா செலவில் இலவசமாக அரிசி வழங்கினோம். அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கினோம். அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கு உதய செனவிரத்ன அறிக்கையின்படி 25 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை வழங்குவோம். அதனால் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 55 ஆயிரமாக அதிகரிக்கும். ஓய்வூதியம் பெறுவோருக்கும் 3000 ரூபா இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட்டது. முதியோருக்கான நிலையான வைப்பு வட்டி வீதம் 10 ஆக அதிகரிக்கப்படும். மக்களுக்கு இலவச காணி உறுதிகளை வழங்குகிறோம். 20 இலட்சம் பேர் இதனால் பயனடைவர். அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டு உரிமைகளை மக்களுக்கு கொடுப்போம். பெருந்தோட்டங்கள் கிராமங்களாக மாற்றப்படும். 'உறுமய' வேலைத் திட்டத்திற்கு தனியான ஒரு ஆணைக்குழு அமைக்கப்படும். அதனால் அடுத்த மூன்று வருடங்களில் அந்த வேலைத்திட்டம் முழுமைப்படுத்தப்படும்.

2 வருடங்களில் எந்த அரசாங்கமும் செய்ய முடியாததை செய்தோம். அதுவே முன்னேற்றம். 2022 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் சிவப்புப் பருப்பு விலை 41 ரூபாவினால் குறைந்துள்ளது. கோதுமை மா 29 ரூபாவினால் குறைந்துள்ளது. கோழி இறைச்சி விலை 11 சதவீதத்தினால் குறைந்திருக்கிறது. டீசல் 28 வீதமாக குறைந்துள்ளது. கேஸ் 31 சதவீதமாக குறைந்துள்ளது. டீசல் 450 ரூபாவில் இருந்து 318 ரூபாவாகக் குறைந்திருக்கிறது. குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 இல் இருந்து 28 ரூபாய் வரையில் குறைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் சுமை குறைந்துள்ளது. அதனாலேயே சிலிண்டர் சின்னத்தை தெரிவு செய்தேன்.

ஆனால் மேலும் பல சலுகைகள் தேவைப்படுகின்றன. அதற்காக ரூபாவை வலுப்படுத்த வேண்டும். 2025 ஆம் ஆண்டில் அதனை செய்து அதிக சலுகைகளை வழங்குவோம். இன்னும் ஒரு வருடம் பாடுபட்டால் நல்ல பலன்களை அடையலாம். பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்யலாம். மருந்து தட்டுப்பாட்டை குறைக்கலாம். பொருளாதாரம் மேம்படும். ஏற்றுமதித் துறை பலப்படும். சுற்றுலாத் துறை மேம்படும். வெருகல் மட்டக்களப்பு வரையில் சுற்றுலா அபிவிருத்தி செய்யப்படும். சிறிய பெரிய ஹோட்டல்கள் அமைக்கப்படும். கல்முனை அருகம்பே வரையில் சுற்றுலாத்துறை பலப்படுத்தப்படும். இதனால் மக்களுக்கும் பல வாய்ப்புகள் உருவாகும்.

விவசாயம் நவீனமயப்படுத்தப்படும், மீன்பிடித்துறையும் நவீனமயப்படுத்தப்படும், வீடுகளின் வருமானம் அதிகரிக்கும், கல்குடாவை அபிவிருத்தி செய்வோம். அதனால் நாம் கடன் பெற்ற 18 தரப்பினருடன் வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தம் செய்துள்ளோம். கடன் மீளச் செலுத்த காலம் வழங்கியுள்ளனர். 10 பில்லியன் டொலர் கடன் சலுகை கிடைத்துள்ளது.

சஜித் இந்த முறையை மாற்றப் போவதாக சொல்கிறார். இவற்றை மாற்றினால் சலுகைகள் நிறுத்தப்படும். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும். 400 ரூபா வரையில் டொலரின் பெறுமதி அதிகரிக்கும். கேஸ் இருக்காது. நாட்டை வழி நடத்தும் முறை சஜித்துக்கு தெரியாது. நாம் அதற்கான முயற்சிகளை செய்த போதும் எமக்கு உதவ முன்வரவில்லை. உங்களுக்கு சலுகைகளை வழங்க முயற்சித்தோம். அதற்கிடையில் தேர்தல் நடத்தவில்லை என்று எனக்கெதிராக வழக்குத் தொடுத்தனர். தேர்தல் நடத்தியிருந்தால் அதற்கே 3 4 மாதங்களை செலவிட வேண்டியிருந்திருக்கும்.

2022 ஒவ்வொரு நொடியும் நாம் பாடுபட்டதாலேயே இன்றைய நிலை எட்டப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாடும் இவ்வளவு சீக்கிரம் மீண்டு வந்ததில்லை. அதனைத் தடுப்பதே எதிர்க் கட்சியின் தேவையாகும். எனக்கு எதிரான நீதிமன்ற தீர்ப்பை பெற்றுள்ளனர். மக்களை வாழவைப்பது அடிப்படை உரிமை மீறல் என்று நான் நினைக்கவில்லை. மக்களுக்காக முன்வந்து கஷ்டப்பட நான் தயார். அடுத்த தலைமுறைக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதே எனது தேவையாகும்.

எனவே தேர்தலில் அவர்களை துடைத்தெறியுங்கள். நாம் ஒற்றுமையாக முன்னேறுவோம்'' என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(26.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
பெண்களுக்கு சகோதரர்களிடையே மன வருத்தம் ஏற்படலாம். கலைஞர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டாலும் வருவாய் பாதிக்கும்.



**ரிஷபம் :**
கலைத்துறையை சேர்ந்தவர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவர், பங்கு சந்தை வியாபாரம் லாபம் இருக்கும்.



**மிதுனம்:**
கூட்டுத் தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற்று மகிழ்வர்.



**கடகம்:**
குடும்பத்தில் ஏற்படும் கடன் பிரச்சனையை பெண்கள் தங்கள் சேமிப்புக் கொண்டு சரி செய்வர். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற முயற்சிப்பர்.



**சிம்மம்:**
குடும்பம் சீராக நடைபெறும் புதிய உற்சாகமும் மகிழ்வும் ஏற்படும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களை பெற்று மகிழ்ச்சியடைவர்.



**கன்னி:**
கலைஞர்கள் புதிய வாய்ப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவர். பங்கு சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும்.



**துலாம்:**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். கவிஞர்கள் தீவிர முயற்சியின் பெயரில் புதிய வாய்ப்புகளை பெற்று உற்சாகத்துடன் பணியாற்றுவர்.



**விருச்சிகம்:**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் புகழும் பொருளும் அதிகரிக்கும்.



**தனுசு:**
குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். கலைஞர்கள் தங்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவர்.



**மகரம்:**
கலைஞர்கள் பணிகளில் தீவிர முயற்சியோடு இருந்தாலும் ஆதாயம் போதுமானதாக இருக்காது. பங்கு சந்தை வியாபாரத்தில் போதுமான லாபம் கிடைக்கும்.



**கும்பம்:**
கலை துறையினர் தங்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவர். பங்குச்சந்தை லாபம் தருவதாக அமையும்.



**மீனம்:**
குடும்பத்தில் பிரச்சினைகளை தவிர்க்க உறவினர்களுடன் சமரசம் செய்யுங்கள். கலைஞர்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டாலும் புதிய வருமானம் இருக்காது.

## பணியிலிருந்து நீக்கப்பட்டோர்...

திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு, அதே வீதத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டை பாதுகாத்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தற்போதைய அரசாங்கம் வீட்டுக்கு அனுப்புவதற்கு முயற்சிக்கிறது. இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி, இந்தத் துறையைப் பாதுகாத்தது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தினூடாக அரச ஊழியர்களுக்கு 24 வீத சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படும்.

## இஸ்ரேலில் அவசரகால...

அமைப்பு கடுமையான ரொக்கட் தாக்குதல்களைத் தொடுத்ததால்,பதற்றம் மேலும் அதிகரித்தது. இதற்குப் பதிலடியாக வான் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேல் இராணுவம், வடக்கு எல்லையிலுள்ள இஸ்ரேலியர்களை பாதுகாப்பாக வெளியேறுமாறும் நேற்று உத்தரவிட்டது.அவசரகால நிலை, அறிவிக்கப்பட்டதால் விமான நிலையங்களும் மூடப்பட்டன.இதையடுத்து ஐரோப்பிய நாடுகள் பல, நேற்று இஸ்ரேலுக்கான விமானப்பயணங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன.

லெபனானின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடியாகவும் ஹமாஸ் அமைப்பின் தலைவர் சயீத் கொலைக்கு பதிலடி கொடுக்கவும் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

இஸ்ரேலின் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஹிஸ்புல்லா படையினர், 70 ராக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஹிஸ்புல்லா தாக்குதலை அடுத்து 48 மணி நேரத்திற்கு ராணுவ அவசர நிலையை இஸ்ரேல் அறிவித்துள்ளது. பிரதமர் நெதன்யாகு தலைமையில் கூடிய இராணுவ அமைச்சரவை கூட்டம் அவசர நிலையை பிறப்பித்ததாக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

## முன்னாள் எம்.பி.க்கள்...

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானித்திருந்தாலும் அந்த தீர்மானத்துக்கு உடன்படவில்லை.கட்சித் தலைவர் றிசாத் பதியுதீனுக்கு தனது தீர்மானத்தை தெரிவித்துள்ளேன். எனது ஆதரவாளர்களில் 95 வீதமானவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்க்கு ஆதரவளிக்க விரும்புவதாக ஆறு மாதங்களாக கூறி வருகின்றனர். அவ்வாறான நிலையில் ஜித் பிரேமதாசவை நான் எவ்வாறு ஆதரிக்க முடியும் என்றார்.

## கடவுச்சீட்டுகளைப் பெற...

வேண்டிய அவசியமில்லை என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய முறைக்கு அமைவாக குடிவரவுத் திணைக்களத்திற்கு வருகை தருவோரின் வரிசையின் அடிப்படையில், ஒரு நாள் சேவையின் கீழ் ஒரு நாளைக்கு 400 கடவுச்சீட்டுகளும், சாதாரண சேவையின் கீழ் 250 கடவுச்சீட்டுகளும் வழங்கப்படும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வெற்றுப் பக்கங்களைக் கொண்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டுக்களைக் கொண்டுள்ள பொதுமக்கள், எதிர்காலத்தில் இபாஸ்போர்ட் முறை அமல்படுத்தப்படும் வரை, ஏற்கனவே உள்ள கடவுச்சீட்டை பயன்படுத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நாடளாவிய ரீதியில், 51 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வகையில் இணையவழி கடவுச்சீட்டு முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முறையின் கீழ், 15000 ரூபா செலுத்தி மூன்று நாட்களுக்குள்ளும் ரூ.5,000க்கு 14 நாட்களுக்குள்ளும் கடவுச்சீட்டை பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இணையவழி கடவுச்சீட்டு முறையில் பல சிக்கல்கள் ஏற்பட்டதினால் இந்த முறை வெற்றியளிக்கவில்லை.

## வேட்பாளர் மரணித்தால்...

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை நடத்த திட்டமிட்டபடி அனைத்து நடவடிக்கைகளும் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட காமினி திஸாநாயக்க குண்டுத் தாக்குதலில் உயிரிழந்ததையடுத்து, அவருக்குப் பதிலாக அவரது மனைவி திருமதி திஸாநாயக்க முன்னிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வன்னி மாவட்டத்தில் 306,081 பேர் வாக்களிக்க தகுதி: 228 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிப்பு!

## வவுனியா அரச அதிபர்

**வவுனியா விசேட நிருபர்**

ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 306,081 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (25.08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் 306,081 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 128,585 வாக்காளர்களும், முல்லைத்தீவில் 86,889 வாக்காளர்களும், மன்னாரில் 90,607 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.



அத்துடன், வன்னித் தேர்தல் தொகுதியில் 13,389 தபால் மூல வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன், 228 தபால் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தலில் வாக்களிப்பதற்காக மூன்று மாவட்டங்களிலும் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சாதாரண வாக்கு எண்ணும் பணிகளுக்காக வவுனியாவில் 12, முல்லைத்தீவில் 8, மன்னாரில் 7 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், தபால் வாக்குகள் எண்ணுவதற்காக 10 நிலையங்களும் என மொத்தமாக 37 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பருத்தித்துறையில் கைதான தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல்

**(யாழ் . விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 11 தமிழக கடற்றொழிலாளர்களையும் எதிர்வரும் 06ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட நாகப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 11 கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்றொழில் நீரியல் வளதிணைக்களம் ஊடாக கடற்படையினர் நீதிமன்றில் முற்படுத்தினர். அதனைத் தொடர்ந்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

# வடக்கின் உதயம்

## நாம் ஓரணியாக ஒன்று திரள வேண்டும் திராவிட கழக தலைவர் கி.வீரமணி

**(யாழ். விசேட நிருபர்)**

கடந்த காலத்தில் பல இரத்தக்கறைகள் உள்ளன. அவற்றை நாம் கண்ணீர் விட்டு அழித்துவிட முடியாது. மீண்டும் நாம் வாழ்வதற்கு இத்தனை இடர்பாடுகள் எமக்குள் இருந்தாலும் நாம் ஓரணியாக ஒன்று திரள வேண்டும் என திராவிட கழகத்தின் தலைவர் கி. வீரமணி யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.



முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 97வது பிறந்தநாள் நினைவு பேருரை அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தில் நேற்ற முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.கே சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் வீரமணி அவர்கள் தொடர்ந்து உரையாற்றும் போது, நாம் இன்னும் உரிமைகளை பெறவில்லை. நாம் லட்சக்கணக்கில் ஆயிரக்கணக்கில் மிகப்பெரிய இழப்புகளை பெற்றுள்ளோம். நாம் சிந்திக்கிற பொழுது அனைவரும் ஒற்றுமையாக சிந்திக்க வேண்டும்.

அமிர்தலிங்கம் அவர்கள் மிகப் பெரும் ஆளுமை உள்ள மனிதர். எனவே அவர் பல்வேறு வழிமுறைகளில் தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் தனது கருத்துக்களை விட்டுச் சென்றார் என மேலும் தெரிவித்தார்.

# சர்வஜன வாக்கெடுப்பு தேவை என தமிழ் பொதுவேட்பாளர் கேட்கவேண்டும்

**(யாழ் . விசேட நிருபர்)**

சர்வஜன வாக்கெடுப்பு தேவை என தமிழ் பொது வேட்பாளர் நேரடியாக கேட்க தவறின், பொது வேட்பாளருக்கு எதிராக நாம் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்ற முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழ் பொது வேட்பாளரை முன்நிறுத்தி என்ன கோரிக்கையை முன்வைக்கப் போகிறோம் என்பதே முக்கியம். இனப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு இல்லை. அது இனியும் கிடைக்கப்போவதில்லை.

எனவே தமிழ் மக்களாகிய நாம் இலங்கைக்குள் எமக்கு தீர்வு இல்லை என்பதனை சர்வதேச சமூகத்திற்கு சொல்ல வேண்டும்.

நாங்கள் தேசியம் தாயகம் சுயநிர்ணய உரிமை பற்றி தந்தை செல்வா காலத்தில் இருந்து பேசி வருகிறோம்.

அதனால் தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதனை தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன்று கட்சிகள் அதனை தீர்மானிக்க முயல்கின்றன. தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை பொது வாக்கெடுப்பு மூலமே அறிய முடியும்.

கேட்க வேண்டியதை கேட்காது, ஒளித்து மறைத்து தமிழ் பொது வேட்பாளர் செயற்படுவாராயின் நாம் கடுமையாக அதனை எதிர்ப்போம்.

தேர்தல் அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அதில் ஒளித்து மறைத்து விடயங்கள் சொல்லப்பட்டால் நாம் கட்சியை கூட்டி, என்ன முடிவெடுக்க வேண்டும் என தீர்மானிப்போம்.

தமிழரசு கட்சிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் சவால் விடுகிறேன். சுயநிர்ணய உரிமை என்பதனை எப்படி பிரயோகிக்க போகிறீங்க? வாக்கெடுப்பு இல்லாமல் அந்த மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதனை நீங்கள் எப்படி தீர்மானிப்பீர்கள்?

அவர்கள் ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள் நாங்களும் தொடர்ந்து ஏமாந்து கொண்டு இருக்க முடியாது. ஏமாற்றுக்கள் போதும் என மேலும் தெரிவித்தார்.

# வளர்ப்பு பன்றி கடித்து வயோதிபப் பெண் பலி!

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

நெடுந்தீவில் பன்றி கடித்ததால் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலைவேளை பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 15ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த நாகமுத்து லட்சுமி (வயது 80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்மணி கடந்த வெள்ளிக்கிழமை மாலை வீட்டுக்கு வெளியே வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அங்கிருந்த வளர்ப்புப் பன்றியொன்று அவரை கொடூரமாகத் தாக்கி, இருதயம் வெளியே தெரியும் அளவுக்கு கடித்துக் குதறியது.

இதனால் படுகாயமடைந்த குறித்த வயோதிபப் பெண், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



பெல்லன்வில ரஜமா விகாரையின் பெரஹறாவின் போது சாரணர் குழுவினர் தமது கடமைகளை நிறைவேற்றியதுடன், பெரஹறாவின் வீதி உலா இடம்பெற்ற பகுதிகளில் சுத்தம் செய்யும் பணிகளிலும் ஈடுபட்டனர். மொரட்டுவ மாவட்ட ஆணையாளர் புஷ்ப குமாரவுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டனர்.


SriLankan Airlines oneworld

**பங்குதாரர்களுக்கான அறிவித்தல்**

ஸ்ரீலங்கன் எயார்லையின்ஸ் லிமிட்டட் (PB 67) ஆண்டறிக்கை 2023/2024, வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு மற்றும் பதிலாள் படிவம் கம்பனி இணையதளத்தில் **https://www.srilankan.com/agm** மற்றும் கம்பனியின் பங்குதாரர் சமூக வலைதளத்தில் **https://shareholders.srilankan.com/** ஹோஸ்ட்/ பதிவேற்றப்பட்டுள்ளது.

பின்வரும் குறியீடுகளை ஸ்கேன் செய்வதன் மூலம் உறுப்பினர்களுக்கு தங்கள் மொபைல் தொலைபேசிகளில் ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

ஆண்டறிக்கை

வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பான அறிவிப்பு

ஸ்ரீலங்கன் எயார்லையின்ஸ் லிமிட்டட் இன் பங்குதாரர்களுக்கான 46ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 2024, செப்டம்பர் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு BMICHஇன் (பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்) மிஹிலக மெதுரவில் நடைபெறும்.

இந்த ஆண்டறிக்கையானது PDF வடிவில் மட்டுமே காணப்படும். அதன் பிரதி ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினால் மேலே உள்ள இணைப்புக்களில் உள்ள கோரிக்கைப் படிவத்தினை பூர்த்தி செய்து, எழுத்து பூர்வமான கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அக்கோரிக்கையானது கையொப்பமிடப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வகிக்கும் நபருக்கு, கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள, எயார்லையின் நிலையம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும், அல்லது **comsec@srilankan.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும், அல்லது **0197335112** என்ற இலக்கத்துக்கு தொலைநகல் அனுப்பவும். உங்கள் கோரிக்கைக் கடிதம் எங்கள் வசம் கிடைக்கப்பெற்ற பின்னரான 8 வேலைநாட்களுக்குள் ஆண்டறிக்கையின் பிரதியொன்று உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கம்பனி செயலாளரை தொடர்புகொள்ளுங்கள்.
மின்னஞ்சல்: **comsec@srilankan.com**
தொலைபேசி: **0197331010**

திருமதி. டல்றின் திருக்குமார்
**கம்பனி செயலாளர்/ பெருநிறுவன செயலக சேவைகளின் குழுத் தலைவர்.**
2024, ஆகஸ்ட் 26.


# தேசிய வீரன் மாவீரன் பண்டார வன்னியனின் 221 ஆவது நினைவு நாள் வவுனியாவில் அனுஸ்டிப்பு

**வவுனியா விசேட நிருபர்**

தேசிய வீரன் மாவீரன் பண்டாரவன்னியனின் 221 ஆவது நினைவு நாள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் நேற்று (25.08) இடம்பெற்றது.



இதன்போது பண்டாரவன்னியனின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன், அவர் தொடர்பான சிறப்புரைகளும் இடம்பெற்றிருந்தது.

வவுனியா நகரசபை செயலாளர் அ.பாலகிருபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, முதன்மை அதிதியாக கலந்து கொண்டதுடன் உள்ளூராட்சி உதவிஆணையாளர் தெ.ரதீஸ்வரன், மற்றும் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நாகர்கோவிலில் 7 இலட்சத்திற்கு ஏலம் போன மாம்பழம்

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள நாகர்கோவில் வடக்கு முருகையா தேவஸ்தான மாம்பழத் திருவிழாவில் மாம்பழம் ஒன்று அடியவர் ஒருவரினால் 7 இலட்சம் ரூபாவிற்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (24) மாம்பழ உற்சவம் இரவு இடம்பெற்றது.

இதில் பூசகரினால் ஆலய நிர்வாகத்திடம் ஏலம் கூறும் வைபவம் ஒப்படைக்கப்பட்டது. இதில் பத்தாயிரம் ரூபாய்க்கு ஆரம்ப ஏலம் கூறப்பட்ட நிலையில் அது படிப்படியாக உயர்ந்து 7 இலட்சம் ரூபாய்க்கு அடியவர் ஒருவரினால் மாம்பழம் ஏலம் எடுக்கப்பட்டது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.08.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5574 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.20,938,536.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 3 9 9 0 8 4

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 149 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 9 0 8 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3816 — சீட்டிழுப்பு திகதி 2024.08.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.70,926,605.52
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 02 16 45 66 — விசேட எழுத்து D — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31558

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1922 — 2024.08.23 — 84411 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.443,350,602.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 25 51 55 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0400
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 6 6 3 5 4 5 — L7 எழுத்து H
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,643,331.68

ராசி சுப பலன் — திகதி 2024.08.23 — சீட்டிழுப்பு இலக்கம் 883 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,929,586.80
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 32 35 37 49 — தனயோக இலக்கம் 01655 — நாளுக்கான விதி எண் 29

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1604 — 2024.08.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,841,397.04
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 37 56 67 71 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 72334

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.08.24
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5575 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.21,017,456.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 6 1 1 2 5 5

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 150 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 1 2 5 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3817 — சீட்டிழுப்பு திகதி 2024.08.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.71,046,330.32
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 35 50 65 69 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 20860

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1923 — 2024.08.24 — 60730 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.443,517,774.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 09 20 25 28
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் 401
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 9 4 5 5 7 0 — L7 எழுத்து Y
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,699,141.28

ராசி சுப பலன் — திகதி 2024.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் 884 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,941,231.20
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 12 19 56 61 — தனயோக இலக்கம் 60011 — நாளுக்கான விதி எண் 21

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1605 — 2024.08.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,118,681.04
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 24 47 53 74 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 63426

நடைபவனியில் கரையோரம் வழியாக நாட்டை சுற்றிவந்த

# சாதனை வீரன் சஹ்மி சஹீதுக்கு பேருவளையில் மகத்தான வரவேற்பு



## பேருவளை பிரதேசம் விழாக்கோலம்; முக்கியஸ்தர்கள் பங்கேற்பு

சாதனைவீரர் சஹ்மி சஹீத் தனது நடைபவனி சாதனையை இன்று (2024.08.26) ஆம் திகதி திங்கட்கிழமை தனது பிறந்த ஊரை வந்தடைந்து நிறைவு செய்கிறார்.

இலங்கை பிரஜை ஒருவரால் நிகழ்த்தப்படும் முதலாவது சாதனை முயற்சியாக இவரது நாட்டைச்சுற்றிய நடைபவனி வரலாற்றில் தடம் பதிக்கிறது.

கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி பேருவளை பள்ளி வீதியிலிருந்து தனது புகழ் பூத்த சாதனை முயற்சியை பிரதேச மக்கள் அணிதிரண்டிருந்த நிலையில் வைபவரீதியாக ஆரம்பித்தார்.

இலங்கையின் கரையோர வழியாக நடைபவனியை ஆரம்பித்த இவர், தென் இலங்கை, கிழக்கு, வடக்கு, மேற்கு என்று நாற்திசையிலும் நடந்து சுமார் 1500 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து சாதனை நிலை நாட்டியுள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்தே சுமார் 50 நாட்களில் பவனியை நிறைவு செய்வதே இவரது இலக்காக இருந்தது. ஆனால் கிட்டத்தட்ட 43 தினங்களிலேயே இலக்கை அடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சுமார் ஒன்றரை மாதங்களாக இவரது நடைபவனி சாதனை பற்றியே நாடெங்கும் பேசுபொருளாக இருந்தது. ஊடகங்களும் பறைசாற்றிக் கொண்டிருந்தன. நாட்டையே உலுக்கி கலக்கிக்கொண்டிருந்தது. இன்று (26) அவரது ஊரான பேருவளை சாதனை வீரனை வரவேற்க விழாக்கோலம் பூண்டுள்ளது.

வசதிவாய்ப்பின்றி தனது சாதனை முயற்சியை கனவுலகிலே கண்டுகலங்கிக் கொண்டிருந்த ஷஹ்மிக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்தோருள் பிரதான பங்குவகித்தவர் 'சிமி ஹோல்டிங்' நிறுவன உரிமையாளர் இஜ்லான் யூசுப். இவரது நிறுவனத்தின் முன்றலில்தான் சஹ்மி தனது நடைபவனியை நிறைவு செய்கிறார். அங்கிருந்து வாகன பவனியோடு பேருவளை நகர கடற்கரை (பீச் பார்க்) மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார்.

இவரது முயற்சிக்கு ஆரம்பத்தில் இருந்தே ஆக்கமும் ஊக்கமும் அளித்ததோடு பயண இடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக தரமான கைப்பேசி ஒன்றையும் கையளித்து சாதனை நிறைவடையும் வரையும் சகல செலவுகளையும் செய்வதாகவும் உறுதிமொழி வழங்கியுள்ளார் அனுசரணையாளர் இஜ்லான் யூசுப். அதேபோன்று இன்று நடைபெறும் நிகழ்வுகளுக்கும் துணை நிற்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைப் போன்றே இப்பிரதேச மாணிக்க வியாபாரிகள், வர்த்தகர்கள், வசதிபடைத்தோர் என்றெல்லாம் சஹ்மியின் விடயத்தில் அனுசரணை வழங்க முன்வந்துள்ளமையையும் அறிய முடிகிறது. குறிப்பாக ஆரம்ப முதல் இஜ்லான் ஹாஜியாரைப் போன்றே கை கொடுத்து வந்தவர்களில் சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தகரான அஹ்ஸர் ஸவாஹிரும் ஒருவராவர். பயண ஆரம்பத்திலேயே தேவையான காட்சிகளைப் பதிவுசெய்து கொள்வதற்காக புகைப்பட கருவியொன்றையும் கொடுத்துதவியுள்ளார். தொடர்ந்தும் ஊக்க மூட்டியும் வருகிறார்.

பயண ஆரம்பத்தில் பல்துறை சார்ந்தோரும் அணிதிரண்டு வழியனுப்பியமை போன்றே சாதனை நிறைவின் போதும் பிரதேசமே திரண்டு சமுத்திர கடற்கரை மைதானத்தையே ஜன சமுத்திரத்தால் ஆக்கிரமிக்கப் போகிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

இதேபோன்றே, இவர் சென்றடையும் பிரதேசங்கள் தோறும் சகல இன, மத மக்களாலும் பெரும் வரவேற்பளிக்கப்பட்டமையை ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் உணர்ந்து கொள்ள முடிந்தது. குறிப்பாக முஸ்லிம் கிராமங்கள், ஊர்களில் எல்லாம் மகத்தான வரவேற்புக் கிடைத்தமை குறித்தும் சஹ்மியின் உரையாடல்கள் மூலம் அறியக் கிடைத்தன.

பேருவளையில் வறிய குடும்பத்தில் பிறந்த இவர், சிறுவயது முதல் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்த நிலையில் படிக்கும் பருவத்திலேயே தந்தையை இழந்தார். இதனால் இவரது குடும்பவண்டி மேடு பள்ளம், மலை மடு என்றெல்லாம் தாண்டி நடைபயின்று கொண்டிருக்கிறது. இந்த கரடு முரடான பயணம் இவரது சாதனை முயற்சிக்கும் கைகொடுத்துக் கொண்டுடிருக்கிறது. தந்தை எனும் துடுப்பறுந்த படகை செலுத்திய அனுபவம் இவருக்கு துணைநிற்கிறது. இந்த நெருக்கடிநிலையில் இவர் உள்ளத்தில் உதித்த சாதனை நிலைநாட்ட வேண்டும் என்ற வைராக்கிய உணர்வே இப்போது கைகூடியுள்ளது.

# இவர் கின்னஸ் சாதனை படைக்கவேண்டும் என வாழ்த்துவோம்

இலங்கையின் வரலாற்றுக் காலத்திலிருந்தே பேருவளை புகழ்பூத்த ஓர் ஊராக திகழ்ந்து வருகிறது. பண்டைய மன்னன், இலங்கை வரலாற்றில் கலேபண்டார என பேசப்படும் வத்ஹிமி மன்னன் முஸ்லிம் பெண் ஒருவரின் அரச வாரிசாகவிருந்து இலங்கையின் முஸ்லிம் மன்னராக பேருளையில் வாழ்ந்த வரலாற்றுப் புகழுக்குறிய ஊர் என்ற பெருமை உண்டு. இலங்கையின் முதலாவது முஸ்லிம் குடியேற்றம் நிகழ்ந்த இடம், முதலாவது மஸ்ஜிதுல் அப்ரார் தோற்றம் பெற்ற பெருமை, ஆத்மீக போரொளிகள், உலகப்புகழ் பெற்ற கொடை வள்ளல்கள் காலத்திற்குக் காலம் தோன்றிய பிரதேசம், இதேபோன்று பல்துறை சார்ந்த சாதனையாளர்கள், நிபுணத்துவம் பெற்றவர்கள் தோன்றிய பேருவளையின் புகழை உலகளவில் பறைசாற்றியும் வந்துள்ளனர். இந்தவரிசையில் இன்று சஹ்மி சாதித்துள்ளார். இனியும் தொடரவும் வாழ்த்துவோம்.

*பேருவளை விசேட நிருபர் பீ.எம்.முக்தார்*

## சஹ்மியின் சாதனைப் பயணத்திற்கு உதவியமை எனது பாக்கியம்

### அனுசரணையாளர் இஜ்லான் யூசுப்



இலங்கை நாட்டை கரையோரமாக நடைபவனியில் சுற்றிவரும் நோக்கில், கடந்த ஜூலை 13 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்து, இன்று பேருவளையை வந்தடையவுள்ள சஹ்மி ஷஹீதிற்கு, பயணத்தின் அனுசரணையாளர் ஸிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் இஜ்லான் யூசுப் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது செய்தியில்,

ஷஹ்மியின் இப் பயணத்திற்கு எமது நிறுவனத்தினால் அனுசரணை வழங்கக் கிடைத்ததை தான் பாக்கியமாக கருதுகிறேன். இலங்கையின் மூவின மக்களும் இவருக்கு வழங்கிய ஆதரவிற்கு வரவேற்பிற்கும் நான் உட்பட எமது நிறுவனம் சார்பாக நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

சஹ்மியின் இச்சாதனைப் பயணம் எமது பேருவளை மண்ணிற்கு கிடைத்துள்ள ஓர் பெருமையாகும், ஏனென்றால் இவ்வாறானதொரு துணிச்சல் முயற்சியில் இதுவரை எவரும் ஈடுபட்டதாக நான் அறியவில்லை, ஷஹ்மி, தன் பயணத்தின் இறுதிக் கட்டத்தைஅடைந்து விட்டார், இவரின் இப்பயணம் வெற்றிகரமாக முடிந்து எந்தத் தடைகளும் இன்றி வாழ்க்கையின் அடுத்த கட்டநகர்வுகளும் வெற்றிகரமாக நிகழ எனது மனமார்ந்த வாழ்த்துகள். என்று கூறினார்.



## இளம் சாதனை வீரன் சஹ்மிக்கு இம்தியாஸ், மர்ஜான் பளீல் வாழ்த்து





நாட்டின் சுற்றுலாத் தளங்களை உலகறியச் செய்யும் நோக்குடன், இன, மத, வேறுபாடின்றி இலங்கையர்கள் அனைவரும் ஒற்றுமையானவர்கள் என்பதை உலகிற்கறியச் செய்யும் நோக்குடன் நாட்டைச் சுற்றி கரையோரமாக நடந்து சென்று சாதனை முயற்சியை பூர்த்தி செய்துள்ள பேருவளை சஹ்மி ஷஹீத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மர்ஜான் பளீல் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தங்களது வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது;

இலங்கை வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தால், அரேபியர்கள் கால்பதித்த முதல் ஊர் என்ற சரித்திரப் புகழ் பேருவளைக்குத் தான் உள்ளது, அதனடிப்படையில் எம் முன்னோர்கள் பலர், பேருவளையின் தனித்துவத்தை உலகறியச் செய்யும் பல கட்டமுயற்சிகளை செய்திருப்பதை நாம் அறிவோம். அதே, பாதையில், அதேஉன்னத நோக்குடன் இன்று பேருவளையின் நாமத்தை உலகறியச் செய்து சாதனை முயற்சியியை நிலை நாட்டியுள்ள சஹ்மி ஷஹீத் வரலாற்றில் பதியப்பட வேண்டிய வரலாற்றுச் செல்வன் என்றால் அது மிகையாகாது.

இன்று, இந்த இளைஞரை வரவேற்பதற்காக முழு பேருவளை மக்களும் மிக ஆவலுடன் காத்திருக்கின்றனர். இன, மத கட்சி பேதமின்றி இந்த சாதனை நாயகனை குதூகலமாக வரவேற்று உச்சாகமளிப்போம்.

சஹ்மி ஷஹீதின் எதிர்கால முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவதோடு அவரின் நல்ல முயற்சிகளுக்கும் தேகாரோக்கியத்திற்கும் இறைவனிடம் பிராத்தனை செய்வோமாக என்றும் அவர்கள் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளனர்.

## ஸேம் றிபாய் பாடசாலை அதிபர் எஸ்.ஆர். குமார்



பேருவளை ஸேம் றிபாய் வித்தியாலயத்தின் பழைய மாணவரும், எமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகவும் சேவையாற்றிய எமது மண்ணின் மைந்தன் சஹ்மி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை தன்னுடைய கால் நடையாய் நடந்து அனைவரினதும் வரவேற்பை பெற்று நாளை திங்கட்கிழமை எம் பேருவளை மண்ணுக்கு வருகை தர இருக்கின்றார்.

இந்த தருணத்திலே பாடசாலை அதிபர், பிரதி அதிபர் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பிள்ளைகள் அனைவரும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அதே நேரத்தில் விஷேடமாக பாடசாலை அபிவிருத்தி சங்கம் பழைய மாணவர், மாணவிகள் சங்கம் என்பனவும் அவரை கௌரவிக்க உள்ளார்கள். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பாடசாலையில் அவருக்கான வரவேற்பு நிகழ்வு ஒன்றை செய்வதற்கு உத்தேசித்துள்ளோம். எனவே சஹ்மிக்கு அனைவர் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## கலாநிதி நஜீப் ஹாஜியார்

இலங்கை நாட்டை கரையோரமாக சுற்றி சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டு தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள பேருவளை சஹ்மி சஹீதிற்கு நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி தேசமான்ய நஜீப் பின் அமீர் ஆலிம் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தொடர்நது அவர்,

இஸ்லாமிய சரித்திரத்தின் தாயகம் என வரலாறு கூறும் பேருவளை மண்ணிலிருந்து ஒரு இளைஞன் இவ்வாறொரு சாதனையை நிலைநாட்டுவது முஸ்லிம் மக்களுக்கு கௌரவமாகும் என்றும் சமூகத்துடன் இணைந்து செயற்படும் சஹ்மி ஷஹீத், தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்து எதிர்காலத்திலும் பயனுள்ள சாதனைகளை நிலைநாட்டு வாழ்த்துகள்.

## தர்காநகர் இஸ்லாமிய நலன்புரி சங்கம்

நாட்டின் இன்றைய பேசுபொருளாக மாறியுள்ள சாதனை இளைஞன் சஹ்மி சஹீதிற்கு தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரி சங்கத்தின் தலைவரும் சுஹைர் ஹஜ் டிரவல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான தேசபந்து ஏ. பீ.எம் சுஹைர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர், பேருவளை பிராந்தியத்திற்கு மட்டுமன்றி நாடளாவிய முஸ்லிம் சமூகத்திற்கும் இவர் கௌரவத்தை பெற்றுத்தந்துள்ளார்.

முஸ்லிம்கள் மனிதநேயமிக்கவர்கள் என்பதை இவர் உலகிற்கு பறைசாற்றி உள்ளார். இவரது இன்றைய பயணமும் சிறப்பாக நிறைவடைவதற்கு எனது பிரார்த்தனைகள்.

## ரூமி ஹாசிம் பாராட்டு

இலங்கையை சுற்றி, சமாதான நடைபவனி மேற்கொள்ளும் நோக்குடன் கடந்த ஜூலை 13 ஆம் திகதி முதல் நடைப்பவனியில் ஈடுபட்டுவரும் சஹ்மி ஷஹீதுக்கு, ரூமி ஹாஷிம் பவுண்டேசன் ஸ்தாபகர் கலாநிதி ரூமி ஹாஷிம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில்;

வரலாற்றுச் சிறப்புமிக்க பேருவளை மண்ணின் சமாதானப் புறாவாக, எழில்மிகு இலங்கையைச் சுற்றிவரும் சஹ்மி சஹீத், தடைகளைத்தாண்டி, தேக ஆரோக்கியத்தோடு, உற்சாகத்தோடு, தன்னுடைய பயண இலக்கை அடையவேண்டும் என்று எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

## 'ஸஜ்ஜாத் ஜெம்ஸ்'

நாட்டை சுற்றி கால்நடையாக வளம் வந்து சாதனை படைத்துள்ள எமது பிரதேச இளைஞன் சஹ்மி சஹீதுக்கு இன்றைய தினம் பேருவளையில் வழங்கப்படவுள்ள மாபெரும் வரவேற்பையிட்டு தான் பெரும் மகிழ்ச்சியடைவதாக சீனன்கோட்டை ஸஜ்ஜாத் ஜெம்ஸ் நிறுவன உரிமையாளர் பர்ஹான் ரபா தெரிவித்துள்ளார். அவரின் சாதனை பேருவளை பிரதேசத்திற்கு மாத்திரமன்றி முழு இலங்கைக்கும் புகழை ஈட்டித்தந்துள்ளதோடு விசேடமாக முஸ்லிம் சமூகத்திற்கு மாபெரும் கௌரவத்தை பெற்றுத்தந்துள்ளதாக பர்ஹான் ரபா விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது இன்றைய வரவேற்பு நிகழ்வும் சிறப்பாக நிறைவடைவதற்கு எனது பிரார்த்தனைகள்.

## பேருவளை முன்னாள் உப நகர பிதா ஹஸன் பாஸி

இலங்கை நாட்டை 50 நாட்களுக்குள் கரையோரமாக சுற்றி வந்து சாதனை படைக்கும் அசாத்திய முயற்சியில் ஈடுபட்டுள்ள நண்பன் சஹ்மி சஹீதுக்கு பேருவளை முன்னாள் உப நகரபிதாவும் கோல்டன் கேட் சர்வதேசப் பாடசாலையின் முகாமைத்துவ தலைவருமான ஹஸன் பாஸி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். சஹ்மி தன் இளவயதிலே பலகட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு ஓர் துடிப்பான இளைஞன்.





# சஹ்மி ஷஹீதுக்கு பேருவளையில் இன்று வரவேற்பு

## சமூக சேவையாளர் அரூஸ் அஸாத்

இலங்கையை நடைபவணியாக சுற்றிவந்து சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பேருவளை சஹ்மி ஷஹீதிற்கு சமூக சேவையாளர் அரூயஸ் அஸாத் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் கூறியதாவது, ஷஹ்மியின் இம்முயற்சியினை நான் ஒரு அசாதாரண முயற்சியாகவே பார்க்கிறேன்.

இவரது 1500 கிலோ மீற்றர் நடைபவனியானது ஓர் மாபெரும் சாதனையாகும்.

இவரது, சாதனை பயணத்தை வரலாற்று ரீதியிலான ஓர் சாதனையாகஆவணப்படுத்துவற்கான நடவடிக்கைகளை நாம் விரைவில் மேற்கொள்வோம் என்று கூறினார். சஹ்மி, தன் சாதனைப் பயணத்தை தடங்கல்கள் இன்றி ஆரோக்கியமாக முடிப்பதற்கு எனது வாழ்த்துகள்.



சாதனை வீரருடன் சுப்பர் வின்டோ உரிமையாளர் ரம்ஸான் ஜுனைத்

## பேருவளை பைன் ஜூவல்லர்ஸ் வாழ்த்து

இலங்கையை நடைபவனியாக சுற்றிவந்து சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சஹ்மி ஷஹீதிற்கு பேருவளை பைன் ஜூவல்லர்ஸ் உரிமையாளர் ஆரிப் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில்,

ஷஹ்மியின் இச்சாதனை முயற்சி எமது பேருவளை பிரதேசத்திற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்குமே பெருமையை தேடித்தந்துள்ளது. மேலும் இவரது இப்பயணம் மூலம் நாட்டின் சுற்றுலாத் துறைக்கும் பெரிதும் பங்களிப்பு ஏற்படும் என்பதை எதிர்பார்க்க முடியும்.

சஹ்மி தன் சாதனைப் பயணத்தின் இறுதிக் கட்டத்தையும் தடங்கல்கள் இன்றி ஆரோக்கியமாக முடிப்பதற்கும் எனது பிரார்த்தனைகள்.

## Family Care பார்மசி உரிமையாளர் பர்ஹத்

இலங்கை நாட்டை 45 நாட்களுக்குள் கரையோரமாக கால்நடையாக சுற்றி வந்து சாதனை படைக்கும் அசாத்திய முயற்சியில் ஈடுபட்டுள்ள எமது பேருவளை ஊர் நண்பன் சஹ்மி சஹீதுக்கு சீனன்கோட்டை Family Care Pharmacy' உரிமையாளர் எம்.ஆர்.எம். பர்ஹாத் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார். சஹ்மி தன் இளவயதிலே பல கட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு ஓர் துடிப்பான இளைஞன்.

அவரது இந்த பெரும் சாதனை முயற்சியை எண்ணி சமூகம் என்ற வகையில் நாம் பெருமிதமடைகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## லகி சுப்பர் உரிமையாளர் ஹுஸ்னி முபாரக்

இலங்கையை சுற்றி கால்நடையாக வளம் வந்த பேருவளை மண் ஈன்றெடுத்த தவப்புதல்வன் சஹ்மி சஹீதின் இலட்சியம் நிறைவேற தாம் பிரார்த்திப்பதாக பேருவளை 'லகி சுப்பர்' நிறுவனத்தின் உரிமையாளர் ஹுஸ்னி முபாரக் விடுத்துள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

## குலாம் ஜெம்ஸ் நிம்ஸான் நஜார் பாராட்டு

சஹ்மியின் சாதனைப் பயணம் எமது பேருவளை மண்ணிற்கு கிடைத்துள்ள ஓர் பெருமையாகும், ஏனென்றால் இவ்வாறானதொரு துணிச்சல் முயற்சியில் இதுவரை எவரும் ஈடுபட்டதாக நான் அறியவில்லை என பேருவளை குலாம் ஜெம்ஸ் நிறுவன உரிமையாளர் நிம்ஸான் நஜார் (ராஜு) தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார். மேலும் இன்றைய நிகழ்வில் அனைவரும் பங்கேற்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சீனன்கோட்டை சன்ரைஸ் வி.கழகம்

பேருவளையின் தனித்துவத்தை உலகறியச் செய்யும் நோக்கில் இலங்கையை கரையோரமாக சுமார் 1500 கிலோ மீற்றரை கால்நடையாக சுற்றிவந்து இன்று சொந்த ஊர் திரும்புகின்ற வரலாற்று சாதனை வீரன் சஹ்மி சஹீதின் சாதனையானது நிச்சயம் இலங்கை வரலாற்றில் நிலையான இடத்தைபிடிக்குமென சீனன் கோட்டை சன்ரைஸ் விளையாட்டு கழகம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

தொடர்ந்து அச்செய்தியில், இன்று பேருவளையின் நாமத்தை உலகறியச் செய்து சாதனை முயற்சியியை நிலைநாட்டியுள்ள சஹ்மி ஷஹீதின் பெயர் பேருவளை வரலாற்றிலும் பதியப்பட வேண்டிய வரலாற்றுச் செல்வன் என்றால் அது மிகையாகாது. அவரின் நல்ல முயற்சிகளுக்கும் தேகாரோக்கியத்திற்கும் இறைவனிடம் அனைவரும் பிராத்தனை புரிவோமென சன்ரைஸ் விளையாட்டுக்கழக செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமூக சேவையாளர் பாஸி சுபைர்...

கடந்த ஜூலை 13 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்து, இன்று (26) பேருவளையை வந்தடையவுள்ள சஹ்மி ஷஹீதிற்கு, சமூக சேவையாளர் பாஸி சுபைர் வாழ்த்து தெரிவித்துள்ளதோடு அவரது, இந்த சாதனை இலங்கை வரலாற்றில் நிச்சயம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என தெரிவித்துள்ளார். மேலும், அன்னாரின் எதிர்காலம் சுபீட்சம் நிறைந்ததாக அமைய இறைவனை பிரார்த்திப்போம்.

## பேருவளை உதைபந்தாட்டச் சங்க தலைவர் றிஸ்வான் ஹாஜி

இலங்கை திருநாட்டை கரையோரமாக கால்நடையாக சுற்றி சுமார் 1500 கிலோ மீற்றரையும் 45 நாட்களில் வளம் வந்து இன்று முற்றுப்பெறுகின்ற சாதனை வீரர் சஹ்மி சஹீதின் சாதனையை உலகறியச்செய்யும் நோக்கில் இன்று பேருவளை நகரில் அவருக்கு வழங்கப்படுகின்ற வரவேற்பை மிகவும் மகிழ்ச்சியுடன் தானும் வரவேற்பதாக பேருவளை உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவரும் பேருவளை சுப்பர்சன் விளையாட்டுக்கழகத்தின் தலைவருமான எம்.எஸ்.எம். றிஸ்வான் சாலி வழங்கியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில், பேருவளை வரலாற்றில் சாதனைவீரர் சஹ்மி சஹீதின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டோருக்கு எத்திவைக்க விரும்புவதாகவும் அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டு. மாவட்டத்தின் 80 வீதத்துக்கும் அதிகமான வாக்கு ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கே

## இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

நாட்டை மீட்டெடுத்த ரணில் விக்கிரமசிங்கவை முழு இலங்கையர்களும் ஆதரிக்க தீர்மானித்துள்ளதாகவும், ஜனாதிபதி தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் 80 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இதனை தெரிவித்த அவர்,

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை எதற்காக நாம் ஆதரிக்க வேண்டுமென்பதை சிந்திக்க வேண்டும். நாடு இருளில் இருந்தபோது அதனை வைத்து அரசியல் செய்து கொண்டிருந்த தலைமைகளுக்கு மத்தியில் நாட்டிற்கு ஒரு வெளிச்சத்தை ஏற்றிய தலைவராக தற்போதைய ஜனாதிபதி முன் வந்தார். அதற்கு எமது மாவட்ட மக்கள் அவருக்கு நன்றி கடன் செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.



எதிர்க்கட்சித் தலைவர் பிரச்சனைகளை வைத்து அரசியல் செய்து கொண்டிருந்தார். அனுரகுமார திசாநாயக்க பிரச்சினைகளை ஏற்படுத்திய தலைவராக காணப்பட்டார். ஆனால் யாருமே இதற்கான தீர்வுகளை கொண்டுவர முயற்சிக்கவில்லை.

இவ்வாறான கால கட்டத்தில் நாட்டை மீட்டெடுத்து பொருளாதாரத்தை கட்டி எழுப்ப துணிச்சலாக முன் வந்தவரே தற்போதைய ஜனாதிபதி.

இதனால்தான் இன்று முழு இலங்கை மக்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தீர்மானித்துள்ளனர். ஜனாதிபதி தேர்தலில் முக்கிய வேட்பாளர்கள் கூட எமது ஜனாதிபதியின் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## கிழக்கின் குரல்

# சஜித், அநுர நாட்டை நேசிப்பார்களாயின் ரணிலுக்கே அவர்கள் வாக்களிக்க வேண்டும்

## தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சி செயலாளர்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

சஜித் பிரேமதாச மற்றும் அனுர குமார திசாநாயக்க உண்மையாகவே நாட்டை நேசிக்கின்ற தலைவர்களாக இருந்தால், அவர்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிக்க வேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியின் செயலாளர் பூ பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு இதனை தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்காக சிரமப்பட்டபோது அவர்களை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்த நாட்டுக்கு நல்ல ஒரு தலைவர் தேவை. அதற்காக அவரை நாம் ஆதரிக்கின்றோம். சகல ஆற்றல்களும் உடைய தலைவராக அவர் இருப்பதனால் எமது கட்சி அவரை ஆதரிக்கின்றது. நாடு ஆபத்தில் இருக்கும் போது விட்டுச்சென்றவர்கள் இன்று நாட்டை தாருங்கள் என்று கேட்கின்றார்கள்.



இன்று நாட்டை பாதுகாக்கின்ற தலைவராக, கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதியையே நாம் ஆதரிக்க வேண்டும் என எமது கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தீர்மானம் எடுத்துள்ளார். எனவே அவரது சின்னத்துக்கு வாக்களித்து கிழக்கு தமிழர்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்

# அம்பாறை மாவட்ட இளைஞர்களின் எழுச்சி மாநாட்டில் பலர் பங்கேற்பு



(மாளிகைக்காடு குறுப் நிருபர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் எழுச்சி மாநாடு, சாய்ந்தமருது பௌஸி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும், மயோன் கல்வி அபிவிருத்தி அமைப்பின் தவிசாளருமான ரிஸ்லி முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற, இந்த இளைஞர் மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். அமீர் அலி, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் அமைப்பினர், பெண்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பிரதான வேட்பாளர்களுடன்

# பேரம் பேசும் சக்தியாக அழுத்தங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம்

## எம்.ஏ.சுமந்திரன்

(தம்பலகாமம் குறுப் நிருபர் )



மூன்று பிரதான வேட்பாளர்களையும் சமதூரத்தில் வைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாகவும், இதில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக கட்சி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் (24) பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்த அவர்,

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிக்கப்போகிறீர்கள் என பலர் என்னிடம் கேட்கின்றனர். தீர்க்கமான முடிவின் பின்னர் யாருக்கு? ஏன்? ஆதரவளிக்கின்றோம் என்பதுடன் அதற்கான தெளிவான காரணங்களையும் மக்கள் மத்தியில் அறிவிப்போம்.

எமது மக்களுடைய வாக்குகள் தேவை என்பது, மூன்று வேட்பாளர்களும் நன்கறிவார்கள். இதனால் பேரம் பேசும் சக்தியாக அழுத்தங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம் என்பதை மத்திய செயற்குழுவிற்கு அறிவித்துள்ளேன். எமது கட்சியின் ஆதரவு தொடர்பாக கட்சி முடிவெடுக்கும் வரை பொறுமைக்காக்க வேண்டும் என கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் வாக்களிக்க 13 இலட்சத்து 21 ஆயிரத்து 43 பேர் தகுதி

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2024 தேர்தல் வாக்காளர் இடாப் பின்படி, 13 இலட்சத்து 21,043 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49,686 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 55,432 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 3 இலட்சத்து 15,925 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

# சாரதிக்கு மாரடைப்பு; பஸ் விபத்து

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்று, இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவாலஹிந்த பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்ஸின் சாரதிக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால், குறித்த பஸ் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து, பயணிகள் பஸ்ஸின் சாரதியை உடனடியாக இங்கினியாகல வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளான பஸ்ஸில் 40 பேர் பயணித்துள்ள நிலையில், ஒருவருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டுள்ளதாக இங்கினியாகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிறு விளம்பரம்



## மோட்டார் வாகனங்கள்

113

**சுசூகி கார்கள்** விற்பனைக்கு

CBF-7257 Suzuki 2017 car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொலைபேசி - 0714 542958. 057583

119



**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

PX-0887 Mahindra Maximo - 2013 அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொலைபேசி - 0711 210810. 057577

47-8798 Toyota Dyna 1991 Lorry அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொலைபேசி - 0714 542958. 057579

122



**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

AAH-4196 Bajaj 2013, AAH-7463 Bajaj 2013, QX-9730 Bajaj 2010 Threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொலைபேசி - 0711 210810. 057576

**Repeat Your ad For Better Offers**

---

## வரையறுக்கப்பட்ட சீ~நோர் நிறுவனம் (கடற்றொழில் அமைச்சு)

2. வங்கியின் நிதியறிக்கைகள், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிலையத்தினால் வெளியிடப்பட்ட SLFRS மற்றும் LKAS என்ற இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

**சான்றளிப்பு:**
கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஒப் சைனா, கொழும்பு கிளையின் நாட்டு முகாமையாளர், நாட்டு உதவி முகாமையாளர் ஆகிய நாம் பின்வருமாறு கூட்டாக உறுதிப்படுத்துகின்றோம்:

(அ) மேலுள்ள அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் வரைவிலக்கணங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளன.
(ஆ) இக்கூற்றுக்களில் உள்ளடக்கிய தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை என அறிவிக்கப்படாதவிடத்து அவை கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும

**வாங் சுவான்**
(ஒப்பம்) நாட்டு முகாமையாளர்
2024 ஆகஸ்ட், 20

**காவோ லியாங்**
(ஒப்பம்) பிரதி நாட்டு முகாமையாளர்
2024 ஆகஸ்ட், 20

---

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பின்வரும் பெறுகைக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் பிரகாரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் சிறியளவிலான திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (இல. ரூபா) | ஆவணக் கட்டணம் VAT உள்ளடக் கப்பட்டுள்ளது (இல. ரூபா) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/04/PT/2024/MA/ SPW/04 | கடல்சார் பொறியியல் பிரிவு, போட் ஹவுஸ் கட்டிடத்திற்கு Skylight Domes மற்றும் Turbine Ventilators வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப் படுத்துதல் | 50,000.00 | 1,000.00 | 2024-09-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

1. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

2. விலைமனுதாரர்கள் Skylight Domes மற்றும் Turbine Ventilators வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான இயைபுடைய தொழிற்றுறையில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் கடல்சார் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0094 11 2482330/ தொலைநகல்: 0094 11 2342537 / மின்னஞ்சல்: jagath_kumara@slpa.lk மற்றும் 2027-06-07ஆம் திகதி முதல் 2024-08-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் இதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், 2024-08-26ஆம் திகதி முதல் 2024-09-26ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரை பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். ஆவணக் கட்டணத்திற்கான கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

5. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறிகளுடனான விலைமனுக்களை விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும் திகதியான 2024-09-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பிந்தாமல் தலைவர், சிறியளவிலான திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு - 01 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை, கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபை, கொழும்புத் துறைமுக ஆணைக்குழு கட்டிடம், தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகளின் சமுகத்தில் திறக்கப்படும். அவர் பின்வரும் முகவரியில் உள்ள மாநாட்டு அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம்.

6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-09-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பிரதான பொறியியலாளர் (கடல்சார்) அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு பின் தள விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதான பொறியியலாளர் (கடல்சார்),**
**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு 01.**

---

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
## இலங்கை திரிபோஷ லிமிடெட்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பெறுகை : 190MTs முழு ஆடை/ முழு பால்மா வழங்கல்**
**(விலைமனு இல.: SLTL/TB/08/2024) மற்றும்**

**பெறுகை : 180,000 எண்ணிக்கையான 3Ply கைவினை காகித பைகளின் வழங்கல்**
**(விலைமனு இல.: SLTL/TB/10/2024)**

1. இலங்கை திரிபோஷ லிமிடெட்டுக்காக 190MTs முழு ஆடை/ முழு பால்மா மற்றும் 180,000 எண்ணிக்கையான கைவினை காகித பைகளின் (3Ply) வழங்கலுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை திரிபோஷ லிமிடெட்டின் சார்பில் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுதாரர் 2007 இன் 7 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் திறக்கப்படும் 2024.09.19ஆம் திகதி தொடக்கம் 2024.12.19 ஆம் திகதி வரை 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
5. அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ரொக்கப்பணத்தின் மூலம் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி, ஒப்பந்தப் பதிவாளரினால் வழங்கப்பட்ட PCA3 உடன் சேர்த்து கீழுள்ள முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து 2024.09.18 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மற்றும் பி.ப. 03.00 இற்கு இடையே வேலை நாட்களில் ஜாஎல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிடெட், சிரேஷ்ட முகாமையாளரிடம் இருந்து (011-2236588/011-2237418) ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்களை 2024.09.19 ஆம் திகதி பி.ப. 02.30 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேல் குறிப்பிடப்பட்ட நேரத்தின் பின் கீழுள்ள முகவரியில் விலைமனுதாரர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் மேல் குறிப்பிடப்பட்டவாறு மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை பெயர் | மீளளிக்கப்படாத கட்டணத் தொகை (இ. ரூபா) | விலைமனு பிணை தொகை (இ. ரூபா) | விலைமனு பிணையின் செல்லுபடிக்காலம் |
|---|---|---|---|
| 190MTs முழு ஆடை/ முழு பால்மா வழங்குவதன் பெறுகை விலைமனு இல.: SLTL/ TB/08/2024 | 50,000.00 | 5,700,000.00 | 2024.09.19 அன்று தொடக்கம் 2025.01.16 |
| 180,000 எண்ணிக்கையான கைவினை காகித பைகள் (3Ply) வழங்கலின் பெறுகை விலைமனு இல.: SLTL/ TB/10/2024 | 6,500.00 | 351,000.00 | 2024.09.19 அன்று தொடக்கம் 2025.01.16 |

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரி:**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிடெட்,**
**த.பெட்டி 17,**
**கப்புவத்த,**
**ஜாஎல.**

# விலைக்கோரல் அழைப்பு

## மாவட்டச் செயலகம், நுவரெலியா

மலைநாடு நூற்றாண்டு 2024 விசேட ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் பின்வரும் செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையினைப் பயன்படுத்தி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

| உருப்படி | பொறியியல் மதிப்பீட்டுத் தொகை | மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்பு ரூபா | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் காலம் மற்றும் இடம் | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதி நாள் | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் இடம் - மாவட்டச் செயலக ஆஷ்சர்ய மண்டபம் | ICTAD எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| ஹெல்சிரிகம ம/மா/கொத் வீரசேகர வித்தியாலயத்திற்கு அருகில் கொத்மல்கம நோக்கிச் செல்லும் 1.4 கி.மீ. கொண்ட கம்மெத பிரதான வீதியை அபிவிருத்தி செய்தல் | 22.6 மில்லியன் | 6000.00 | 2024-08-26ஆம் திகதி முதல் 2024-09-12ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மாவட்டச் செயலக கணக்கிடல் பிரிவில் | ரூபா 226,000.00<br>வங்கிப் பிணை முறி 452,000.00<br>2024 டிசம்பர் 31 | 2024-09-13 | 2024-09-09 - மு.ப. 10.00 மணிக்கு | C5 C6 |

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-09-13ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், நுவரெலியா எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விலைமனுதாரர் / அவரின் பிரதிநிதியொருவரினால் நேரில் கொண்டுவந்து மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் உள்ள செயலாளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுக் கிடைக்கச் செய்யலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஹெல்சிரிகம ம/மா/கொத் வீரசேகர வித்தியாலயத்திற்கு அருகில் கொத்மல்கம நோக்கிச் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக விலைமனு கோரல்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் உள்ள செயலாளர் பிரிவில் 2024-09-13ஆம் திகதி மு.ப. 11.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் மு.ப. 11.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக் கோரலின் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

(விசாரணை கணக்கிடல் பிரிவு - 052-2222233/36)

**தலைவர்,**
**மாவட்டச் செயலக பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**நுவரெலியா.**

# பெறுகை அறிவித்தல்

## ருவன்வெல்ல பிரதேச சபை - சப்ரகமுவ மாகாணம்

01. கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு ருவன்வெல்ல பிரதேச சபையின் பெறுகைக் குழு தலைவரினால் 2024.09.11 ஆம் திகதி மு.ப. 11.00 வரை விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

| வரிசை இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட மொத்த வேலை பெறுமதி (ரூபா. மில்.) | மீளளிக்கப்படாத கேள்வி கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் விலைமனு பிணை (ரூபா) | ஒப்பந்த பதிவு பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | அமித்திரிகல நூலக பல் செயற்பாட்டு கட்டிட நிர்மாணத்தின் முதல் கட்டம் - எஞ்சிய வேலையை பூர்த்தி செய்தல் | 11.2 | 5,000.00 | 112,000.00 | C5/C6 |

02. இந்த விலைமனுக்கோரல் திறந்த போட்டி ரீதியான பெறுகை செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுவதோடு, இந்தப் பணி 50 மில். ரூபாவை விட குறைவு என்பதால் 04/2016(II) மற்றும் 04/2016(III) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின்படி பிராந்திய முன்னுரிமை மற்றும் குறித்த (CIDA) தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக விலைமனுதாரர் ஒருவர் தேர்வு செய்யப்படும். அந்த சுற்றுநிருபத்துடன் தொடர்புபட்டு பின்னர் வெளியிடப்பட்ட 03/2020, 03/2020(I) மற்றும் 04/2016(Iv) ஆகிய பொது நிதி சுற்றுநிருபங்களும் பெறுகை செயற்பாட்டுக்கு பொருந்தும்.
03. 2024.08.27 ஆம் திகதி தொடக்கம் 2024.09.10 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேல் குறிப்பிடப்பட்டவாறு கட்டணத்தை செலுத்தி ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
04. அனைத்து விலைமனுதாரர்களும் இந்த வேலைக்காக மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு பிணை பெறுமதி சார்ந்து விலைமனு பிணையாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட விலைமனு பிணை ஒன்றை 2024.09.11 ஆம் திகதி தொடக்கம் 2025.01.08 ஆம் திகதி வரை செல்லுபடியான வகையில் 'செயலாளர், பிரதேச சபை, ருவன்வெல்ல' பயனாளர் என குறிப்பிட்டு பெற்றுக்கொண்ட விலைமனு பிணை ஒன்றின் மூலம் குறித்த பணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இந்த வேலை தொடர்பில் விபரங்களை ருவன்வெல்ல பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது 0362266275 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். தேவையானவர்களுக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.09.11 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகத்தில் முத்திரை இடப்பட்ட பெட்டிக்கு கொண்டுவந்து இட முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, விலைமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். மேலும் வேலையுடன் தொடர்புபட்ட நகல் பிரதியை வேறாக உறை ஒன்றில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
07. 2024.09.11 ஆம் திகதி மு.ப. 11.15 க்கு ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
08. விலைமனுக்கள் முழுமையாக அல்லது பகுதி அளவில் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை ருவன்வெல்ல பிரதேச சபை பெறுகைக் குழு வசமானது.
09. அனைத்து விலைமனுக்களும் 2024.12.12 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ருவன்வெல்ல பிரதேச சபை**

2024.08.26 அன்று

# கடற்றொழில் அமைச்சு

## இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

NAQDA

## விலைமனுக்கோரல்

## கொள்முதல் அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| NQ/DPC/2024/NCB/G/09 Procurement of Lab Equipment (For National Aquaculture Development Centre Dambulla) | மனு பாதுகாப்பு தொகை II - மனு தரவு பத்திரத்தில் (BDS) ITB அட்டவணை 20.2- விதி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது | 4,000.00 | 2024.09.18 பி.ப.3.00 | 2024.09.19 பி.ப.2.00 |

02. அனைத்து தகுதியான மனுதாரர்களும் மேலதிக தகவல்களை கொள்முதல் முகாமையாளர் (தொலைபேசி : 072 821 99 44/ 011-2786544, po@naqda.gov.lk) மற்றும் NAQDA உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலமாக **www.naqda.gov.lk** பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.**
**2024.08.26**

SELACINE

## இலங்கை இராணுவம்

# கேள்வி அறிவித்தல்

1. இலங்கை இராணுவத்திற்குரித்தான 01 பஸ், 04 டிரக்குகள், 04 வேன்கள், 01 ஜீப், 06 கார்கள், 03 கெப்களுக்கான திருத்தவேலைகளை மேற்கொள்வதற்காக தகைமை வாய்ந்த உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
2. சகல தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 2024-08-26ஆம் திகதி முதல் 2024-09-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 1000 முதல் பி.ப. 1500 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் வாகனத் தரிப்பிட இடப்பரப்பில் கேள்விகள் திறக்கப்படும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். சகல கேள்விகளும் ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் கேள்விகள் திறக்கப்படும் பிரிவில் 2024-09-27ஆம் திகதி 1100 மணித்தியாலத்தில் திறக்கப்படும்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் www.promise.lk மற்றும் www.army.lk எனும் இணையதளங்களுக்குப் பிரவேசித்து தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

அ. மின்சாரம் மற்றும் இயந்திர பொறியியல் பணிப்பாளர் சபை,
இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
தொலைபேசி இலக்கங்கள்: 0113070478, 0114051843

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கிண்ணியா பிரதேச சபை, கச்சகொடித்தீவு, கிண்ணியா

1. கச்சகொடித்தீவில் கடைத்தொகுதியொன்றின் நிர்மாணத்திற்கு செலவிடுவதற்காக பொதுநிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து நிதியிடலொன்றை கிண்ணியா பிரதேச சபையானது பெற்றுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விக்கோரல்களை கிண்ணியா பிரதேச சபையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
3. கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்காக எதிர்பார்க்கும் கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்தில் கட்டிட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்விக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்விக்கோரல் ஆவணத்தின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை கிண்ணியா, கிண்ணியா கச்சகொடித்தீவு பிரதேச சபையிடமிருந்து பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் அதே இடத்தில் கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
7. 2024.08.26 ஆம் திகதியிலிருந்து 2024.09.09 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், கிண்ணியா பிரதேச சபை, கிண்ணியாவிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. கேள்விக்கோரல்கள் 2024.09.10 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் செயலாளர், கிண்ணியா பிரதேச சபை, கச்சகொடித்தீவு, கிண்ணியா என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான கேள்விக்கோரல்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன் கேள்விக்கோரல்கள் அவைகளை மூடிய பினனர் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
9. கேள்விக்கோரல்கள் அட்டவணையில் வழங்கப்பட்டவாறான கேள்விப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2024.09.04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பின்வருமாறு நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| வேலையின் விளக்கம் மற்றும் கேள்விக்கோரல் இல. | பெசேவ நீங்கலாக கேள்வியிடக்கூடிய கேள்விகோரல் தொகை (மில்லியனில்) | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்கள்) | தேவைப்படும் தரம் மற்றும் விஷேடத்துவம் | தேவைப்படும் கேள்விப்பிணை: கேள்விப் பிணைத் தொகை | தேவைப்படும் கேள்விப்பிணை: கேள்விப் பிணை செல்லுபடி யாகும் காலப்பகுதி | கேள்விக்கோரல் செல்லுபடியாகும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| கச்சகொடித்தீவில் கடைத்தொகுதிக் கட்டிட நிர்மாணம். ஒப்பந்த இலக்கம்: 24/EP/C/01 | 8.3 மில்லியன் | 80 நாட்கள் | கட்டிட நிர்மாணத்தில் சி-7 அல்லது மேற்பட்டது | 100,000.00 | 2024.12.25 ஆம் திகதியன்று வரையும் | 2024.11.26 ஆம் திகதியன்று வரையும். |

**தலைவர்/(உள்ளூராட்சிக்கான உதவி ஆணையாளர்)**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம்,**
**திருகோணமலை.**

23.08.2024

Login
www.adz.lk
it's what you want

# சுகாதார அமைச்சு

## அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைக்காக சமகால செயற்பாட்டு முறையுடனான 01 எண்ணிக்கையான 700 கேவிஏ (பிரைம்) மற்றும் 01 எண்ணிக்கையான 400 கேவிஏ (பிரைம்) மின்பிறப்பாக்கிகளை வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரிப்பு

**Contract No.: MH/PB/11/CN/26/2024**

1. “அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைக்காக சமகால செயற்பாட்டு முறையுடனான 01 எண்ணிக்கையான 700 கேவிஏ (பிரைம்) மற்றும் 01 எண்ணிக்கையான 400 கேவிஏ (பிரைம்) மின்பிறப்பாக்கிகளை வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர்” அழைக்கின்றார்.
2. கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் முறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக எதிர்பார்க்கப்படும் கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமூலத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளவராகவும் உற்பத்தியாளருடன் சட்டபூர்வமான வர்த்தக உறவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் கொழும்பு-10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, 26 ஆம் இலக்க மெடி ஹவுஸ் கட்டிட 2 ஆம் மாடியிலுள்ள சுகாதார அமைச்சின் பெறுகைக்கான மேலதிக செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. 2024.09.18 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, 26 ஆம் இலக்க மெடி ஹவுஸ் கட்டிட 2 ஆம் மாடியிலுள்ள சுகாதார அமைச்சின் பெறுகைக்கான மேலதிக செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
6. 2024.09.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கேள்விக்கோரல்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விக்கோரல்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. கேள்விகள் 2024.12.18 ஆம் திகதி வரையிலான 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் இவ்வேலையானது ஆரம்பமாகும் சரியான திகதியிலிருந்து ஒப்பந்தக் காலமானது 147 நாட்களாகும்.
8. அனைத்து கேள்விகளும் 2,315,250 ரூபா பெறுமதியான கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் செயலாளர், சுகாதார அமைச்சு என முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணையானது கேள்விகளை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள் பூர்த்தியாகும் திகதியான 2025.01.15 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. சுகாதார அமைச்சின் பொறியியலுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 2024.09.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கேள்விக்கோரல் முன்கூட்டமொன்று நடைபெறும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**மேலதிக செயலாளர் (பெறுகை),**
**சுகாதார அமைச்சு,**
**2 ஆம் மாடி, மெடி ஹவுஸ் கட்டிடம்,**
**இல.: 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

# தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபை

(கைத்தொழில் அமைச்சு)

## இரத்தினக்கல் விற்பனை, கொள்வனவு அல்லது வழங்கலில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்முனைவோருக்கு விடுக்கப்படுகின்ற அறிவித்தல்

1. 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபை சட்டத்தின் 15(2) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி எவரேனுமாள் இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபடலாகாது.
2. அதன்படி இரத்தினக்கல் விற்பனை, கொள்வனவு செய்தல் மற்றும் வழங்கலை மேற்கொண்டு வருதல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட வர்த்தக உரிமத்தின் கீழன்றி எவரேனுமாளினால் மேற்கொள்ளப்படலாகாது.
3. ஏதேனும் விதத்தில் மேலே குறிப்பிட்ட ஏற்பாடுகளை மீறி எவரேனுமாளினால் இரத்தினக்கல் விற்பனை, கொள்வனவு செய்தல் மற்றும் வழங்கலை மேற்கொண்டுவந்தால் அது 1993 இன் 50 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் புரியப்படுகின்ற ஒரு தவறாக அமையும்.
4. சட்டத்தின் 51 (2) பிரிவின்படி இந்த சட்டத்தின்கீழான தவறினைப் புரிகின்ற ஒவ்வோராளும், நீதிவான் ஒருவர் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற வழக்கு விசாரணையின் பின்னர் குற்றத்தீர்பளிக்கப்படுவதன் மேல், பத்திலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து வருடங்களை விஞ்சாததொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாவதோடு அல்லது குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். சட்டத்தின் 51 (3) இன் கீழான தவறு ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து
   - (அ) அந்த ஆட்கள் குழு ஒரு கூட்டுத்தாபனமெனில் அந்த கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது உத்தியோகத்தரும்,
   - (ஆ) இந்த ஆட்கள் குழு, பங்காண்மைத் தொழில்முயற்சியெனில் அந்த பங்காண்மைத் தொழில்முயற்சியின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது உத்தியோகத்தரும், அந்த தவறுக்கு தவறாளியாக கருதப்படல் வேண்டும்.
5. மேலும் இந்த சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளதாக அல்லது புரியப்பட்டுவருவதாக நம்பக்கூடிய காரணங்கள் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபைக்கு இருக்கின்றவிடத்து சட்டத்தின் 49(1) பிரிவின் பிரகாரம் ஏதேனும் தவறு புரிந்துள்ளதாக அல்லது புரியப்பட்டு வருவதாக நம்புமளவிற்கு எவரேனும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு காரணங்கள் இருக்கின்றவிடத்து மேற்படி அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால்,
   - (அ) அந்த தவறினை புரிவதற்காக பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்ற ஏதேனும் பண்டமொன்று அல்லது அந்த தவறு ஏதேனும் பண்டம் சம்பந்தமாக புரியப்பட்டதென கூறப்பட்டால் அந்த பண்டத்தை அவசியமான காலத்திற்குள்
   - (ஆ) இந்த சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு சம்பந்தமாக எவரேனுமாள் எதிராக வழக்கு தொடருவதற்காக அவருடைய அபிப்பிராயத்திற்கு அமைவாக அவசியமாகின்ற அல்லது பயனுள்ளதாக அமைகின்ற ஏதேனும் புத்தகம், பதிவேடு, அறிக்கை அல்லது வேறு ஆவணம் தடைசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படல் வேண்டும்.
6. அதன்படி எவரேனுமாள் பிரத்தியேகப் பெயரில் அல்லது கம்பெனிப் பெயரைக் கொண்டதாக இரத்தினக்கல் விற்பனை, கொள்வனவுசெய்தல் அல்லது விற்பனைசெய்தல் இன்றேல் பரிமாற்றிக்கொள்கின்ற தொழில்முயற்சியில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற அல்லது வேறுவிதமாக இரத்தினக்கல் தொடர்பான வர்த்தக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற அல்லது வழங்குதலை மேற்கொள்கின்றவர்கள் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் இரத்தினக்கல் வர்த்தக உரிமத்தின்கீழன்றியாயின் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபை சட்டத்தின்கீழ் தவறாளியாவார் என்பது அறிவிக்கப்படுகின்றது.

**மேலதிக விசாரணைகளுக்காக தொலைபேசி இலக்கம்**

1. பணிப்பாளர் (அமுலாக்கல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி) 071 - 6845298
2. பணிப்பாளர் (ஏற்றுமதி சேவைகள் மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் ) 071 - 5632525
3. பிரதிப் பணிப்பாளர் (அமுலாக்கல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி) - இரத்தினபுரி 071 - 5362547
4. உதவிப் பணிப்பாளர் (அமுலாக்கல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி) - கொழும்பு 071 - 5362513

**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபை**
**இலக்கம் 12, எல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**
**தொலைபேசி இலக்கங்கள் - 0112329295/2390651/2390645 - 8 பெக்ஸ் - 011 - 2320758**
**வெப் தளம் www.ngja.gov.lk**

# பெறுகை அறிவித்தல்

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு சொந்தமாக ஆதனம் ஒன்றை குத்தகைக்கு விடுவதற்கு மேற்கொள்ளப்படும் விலைமனு அழைப்பு

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு சொந்தமான கீழுள்ள ஆதனத்தை மாதாந்த குத்தகை வாடகை முறையின் கீழ் 03 ஆண்டு காலத்திற்காக குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அந்த குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் குத்தகை ஆதனத்திற்காக குத்தகையை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் விலைமனுதாரர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது. அதன்படி விலைமனுவை சமர்ப்பிப்பவருக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் இருந்து குறித்த விலைமனு ஆவணத்தை 2024.08.27 ஆம் திகதி தொடக்கம் 2024.09.18 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 1500.00 ரூபா பணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

02. முறையான வகையில் தயாரிக்கப்பட்ட 02 தொகுதிகளைக் கொண்ட விண்ணப்பங்களை செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை, தித்தபஜ்ஜல, வெரெல்ல கம என்ற முகவரிக்கு 2024.09.19 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு கைகளால் கொண்டுவந்து இடுவதை மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் விலைமனு விண்ணப்பங்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த குத்தகையை பெறுவதற்கு எதிர்பார்க்கும் குத்தகை ஆதனத்திற்கான விலைமனுக்களை சமர்ப்பித்தல் என்று குறிப்பிடுதல் வேண்டும். இதன்போது 02 தொகுதிகளிலும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டிருத்தல் வேண்டும்.

03. அனைத்து விண்ணப்பங்களும் 2024.09.19 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படுவதோடு அதற்காக விலைமனுக்களை சமர்ப்பிக்கின்றவர்களுக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது அல்லது வேறு முடிவு ஒன்றை எடுப்பது ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் பெறுகைக் குழு வசமானது.

04. இது தொடர்பில் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். தொ.பே. 081-2499576

**அட்டவணை**

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு சொந்தமான குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் குத்தகை ஆதனம் தொடர்பில் விபரம் கீழுள்ளவாறு.

| குத்தகைக்கு கொடுக்க எதிர்பார்க்கும் ஆதனம் | சதுர அடி அளவு | திட்டமிடும் வணிக செயற்பாடு | மாதாந்த குறைந்தபட்ச விலைமனு |
|---|---|---|---|
| மெதவல வர்த்தகத் தொகுதியின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள 05 ஆவது கடை | 301 | பிரதேச சபை அங்கீகரித்த சட்டபூர்வமான வணிகத்திற்காக | ரூபா 9000.00 |

**எஸ்.ஆர். அத்தாவுத**
**செயலாளர்,**
**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாவத்தகம பிரதேச சபை - மாவத்தகம

### உத்தேச சபை அலுவலகம் மற்றும் சபை கூட்ட மண்டபத்தை நிர்மாணித்தல்

1. மாவத்தகம பிரதேச சபையின் செயலாளரினால் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வகையில் உத்தேச சபை அலுவலகம் மற்றும் சபை கூட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளன என்பதுடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாவத்தகம பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து (தொலைபேசி 037-2299821 தொலைநகல்: 037-2299275 மின்னஞ்சல்: mawathagamaps@gmail.com மூலம்) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை கடமை நாட்களில் 9.00 மணித்தியாலம் 16.00 மணித்தியாலம் வரையில் பின்வரும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைமனு ஆவணக் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். அதேபோல் விலைமனு ஆவணங்களை 2024-08-26ஆம் திகதி முதல் 2024-09-18ஆம் திகதி வரையான வார நாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் மாவத்தகம பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைமனுக்களை செயலாளர், பிரதேச சபை, மாவத்தகம எனும் முகவரிக்கு 2024-09-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து அன்றைய தினமே வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. அந்த விலைமனுப் பெறுமதி 2024-09-19ஆம் திகதி முதல் 2024-12-19ஆம் திகதி வரையில் (91 நாட்கள்) செல்லுபடியாதல் வேண்டும்.
9. விலைமனுக்களுடன் 2024-09-19ஆம் திகதி முதல் 2025-01-16ஆம் திகதி வரையில் (119 நாட்கள்) செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றை பிரதேச சபைக்கு ரொக்கப் பணமாக அல்லது மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி பிணை முறி மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மாவத்தகம பிரதேச சபையில் 2024-09-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறும்.

**அட்டவணை**

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத விலைமனு ஆவணக் கட்டணம் | தேவையான தரம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (மீளளிக்கப் படும்) | செல்லுபடிக் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| மாவ/பிச/02/01/ 02/01/2024 | உத்தேச சபை அலுவலகம் மற்றும் சபை கூட்ட மண்டப நிர்மாணம் | 57.129 மில்லியன் | 210 | 5000.00 | C4 மற்றும் C3 | 600000.00 | 2025-01-16 |

**செயலாளர்,**
**பிரதேச சபை, மாவத்தகம.**
2024-08-23.

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண கல்வி, காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சு - தென் மாகாண சபை

### தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்துவதற்கு கீழ்க்காணும் வேலை ஆலோசனைகளுக்காக தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | செயற்றிட்ட இல | பி.பொ. அலுவலகம் | கைத்தொழில் | CIDA தரம் (வீதி நிர்மாணம்) | மீளளிக்கப் படாத பிணை | கேள்வி பிணை பெறுமதி (ரு.) | மதிப்பிடப் பட்ட தொகை (ரு.மி) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | SP/RDA/EL/ PSDG/03/2024 | வெலிகம | கிரலகெலே உள்ளக வீதியை அபிவிருத்தி செய்தல் | C-05 C-06 | 5,000.00 | 184,000.00 | 18.4 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமையூடாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்கள் வழங்கும்போது தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மேற்படி வகுதியின் கீழ் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

03. ரூபா. 50 மில்லியனுக்கு குறைந்த சேயற்றிட்டங்களுக்கான அரச நிதி சுற்றுநிருப இல. 04/2016(ii) மற்றும் 2019.05.08ம் திகதிய மற்றும் இல. 04/2016(iii) மற்றும் 2021.02.18ம் திகதி யசுற்றுநிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் செல்லுபடியாவதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பற்றிய கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.08.23 முதல் 2024.09.05 பி.ப. 3.00 வரை லபுசதுவ, தக்ஷினபாய, தென் மாகாணம், கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் (தரைமாடியில்) பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பிணை இலக்கத்தை வர்த்தக வங்கியிலிருந்து தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின், செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட 2024.09.06 முதல் 2024.12.19 வரை செல்லுபடியாகும் கேள்விப்பிணை அல்லது தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்னர் வழங்கப்படும் காசுப் பற்றுச்சீட்டின் பிரதியை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிப்பிணையாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும்.

06. குறித்த கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை உள்ளடக்கியவாறு செலோடேப் ஒட்டியிருத்தல் வேண்டும். அதன் மூலப்பிரதியில் “மூலப்பிரதி” என்று குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் நகல்பிரதியில் “நகல்பிரதி” என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி வேறுவேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு இட்டு இவ் உறையை பொறியிட்டு இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

07. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.09.06 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண கல்வியமைச்சு, தக்ஷினபாய, லபுதுவ, காலி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து பிரதம கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

08. கேள்விகள் திறத்தல் 2024.09.06 மு.ப. 10.00 இற்கு தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

09. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு முன்பு குறித்த வேலைத்தளத்தை பரீட்சித்து இருப்பது முக்கியம் என்பதால் வேலைத்தளத்தை பரீட்சித்து கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

10. குறைப்பாடுகளுடனான கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். இப் பெறுகை பற்றிய பெறுகை குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**ரஞ்சித் யாபா,**
**பெறுகைக்குழுத் தலைவர்,**
**தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி,**
**நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சு,**
**தக்ஷினபாய, லபுதுவ, காலி.**
**2024.08.22**

**தொ.பே. இல.: 091-2030700**
**மின்னஞ்சல் - acc.moesp@gmail.com**

# இங்கிலாந்திடம் தோல்வியுற்ற இலங்கை அணி 'ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்சிப்பில்' பின்னடைவு

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்த இலங்கை அணி சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் பின்னடைவை சந்தித்துள்ளது.

மான்செஸ்டர், ஓல்ட் டிரபர்ட் மைதானத்தில் நேற்று முந்தியம் (24) முடிவடைந்த இந்த டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 205 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அந்த அணி 57.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது.

ஜோ ரூட் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களை பெற்றார். இலங்கை சார்பில் அசித்த பெர்னாண்டோ மற்றும் பிரபாத் ஜயசூரிய தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.



முன்னதாக 122 ஓட்டங்களால் பின்னடைவை சந்தித்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணிக்கு மத்திய வரிசையில் கமிந்து மெண்டிஸ் (113) தனது மூன்றாது டெஸ்ட் சதத்தை பெற்றதோடு அஞ்சலோ மத்தியூஸ் (65) மற்றும் தினேஷ் சந்திமால் (79) அரைச்சதங்களை பெற்றனர். இதன்மூலம் இலங்கை அணியால் சகல விக்கெட்டுகளையும் இழந்து 326 ஓட்டங்களை பெற முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்டில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 236 ஓட்டங்களை பெற்றதோடு இங்கிலாந்து 358 ஓட்டங்களை சேர்த்தது.

இந்நிலையில் இலங்கை ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் 50 இல் இருந்து 40 புள்ளி விகிதங்கள் சரிந்து 4ஆவது இடத்தில் இருந்து 5ஆவது இடத்திற்கு பின்னடைவை சந்தித்துள்ளது.

இலங்கை அணி இந்தப் பருவத்தில் ஐந்து போட்டிகளில் சந்திக்கும் மூன்றாவது தோல்வியாக இது உள்ளது.

மறுபுறம் இந்த டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணியின் புள்ளி விகிதம் 41.07 ஆக அதிகரித்துள்ளது. இதன்மூலம் அந்த அணி இலங்கையை பின்தள்ளி நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.




# பாக். அணியிடம் பங்களாதேஷ் அணிக்கு முதல் டெஸ்ட் வெற்றி



பாகிஸ்தானை 10 விக்கெட்டுகளால் வீழ்த்திய பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்கு எதிராக முதல் முறை டெஸ்ட் போட்டி ஒன்றில் வெற்றியீட்டியுள்ளது.

ராவல்பிண்டியில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று (25) 30 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அந்த இலக்கை விக்கெட் இழப்பின்றி பங்களாதேஷ் அணியால் எட்ட முடிந்தது.

முன்னதாக பாகிஸ்தான் அணி 146 ஓட்டங்களுக்கு சுருண்ட நிலையில் பங்களாதேஷ் அணிக்கு சவாலான வெற்றி இலக்கு ஒன்றை நிர்ணயிக்க தவறியது. பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 448 ஓட்டங்களை பெற்ற நிலையில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸுக்காக 565 ஓட்டங்களை பெற்றது.

இதன்படி பாகிஸ்தான் அணி 2021 பெப்ரவரி தொடக்கம் தனது சொந்த மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியில் கூட வெற்றி பெற தவறியுள்ளது. இந்தக் காலப் பகுதியில் பாக். அணி சொந்த மண்ணில் நான்கு தோல்வி மற்றும் நான்கு சாமநிலையை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## விண்வெளியில் சிக்கியோர் பெப்ரவரியில் திரும்புவர்



இரண்டு மாதங்களுக்கு மேலாக விண்வெளியில் சிக்கியுள்ள அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவைச் சேர்ந்த இரு விண்வெளி வீரர்களும் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் மூலம் 2025 பெப்ரவரியில் பூமிக்கு திரும்பவுள்ளனர்.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பர்ரி வில்மோர் ஆகியோர் சர்வதேச விண்வெளிக்கு பயணித்த கோளாறுக்கு உள்ளான போயிங் ஸ்டார்லைனர் விண்களம் ஆளில்லாமல் பூமிக்கு திரும்பவிருப்பதாக நாசா தெரிவித்தது.

இந்த இரு விண்வெளி வீரர்களும் கடந்த ஜூன் 5 ஆம் திகதி எட்டு நாள் பயணமாகவே விண்வெளிக்கு சென்ற நிலையில் தற்போது பூமிக்கு திரும்ப சுமார் எட்டு மாதங்கள் விண்வெளியில் காத்திருக்க வேண்டி உள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் விண்வெளி செல்லவுள்ள ஸ்பேஸ் எக்ஸ் விண்கலத்திலேயே பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நால்வர் செல்லும் அந்த விண்கலத்தில் இருவரை மாத்திரம் அனுப்பி எஞ்சிய இரு இருக்கைகளும் சுனிதா மற்றும் வில்மோர் இருவருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## டெலிகிராம் தலைவர் பாரிஸில் கைதானார்




டெலிகிராம் செயலியின் தலைமை நிர்வாக அதிகாரி செல்வந்தர் பேவல் டுரோவ் பாரிஸ் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அசர்பைஜானிலிருந்து அவர் தனிப்பட்ட விமானத்தில் வந்து இறங்கிய போது பாரிஸில் கைதானதாகத் தெரிகிறது.

டெலிகிராம் தளத்தில் போதுமான நெறியாளர்கள் இல்லை. எனவே அதில் இடம்பெறும் குற்றச்செயல்கள் கண்காணிக்கப்படுவதில்லை என்று காவல்துறை கூறுகிறது.

ரஷ்யாவைச் சேர்ந்த டுரோவ் முதன்முதலில் டுபாயில் டெலிகிராம் தளத்தை ஆரம்பித்து வைத்தார். 2014இல் அவர் ஆரம்பித்த வி.கே. சமூக ஊடகத் தளத்தை எதிர்க்கட்சியினர் பயன்படுத்துவதைத் தடுக்குமாறு ரஷ்ய அரசாங்கம் உத்தரவிட்டதை ஏற்க மறுத்து அவர் ரஷ்யாவை விட்டு வெளியேறினார்.

## பாகிஸ்தானில் மின்சார கட்டணத்தில் நிவாரணம்



மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் மின்சாரக் கட்டணங்களில் விரைவில் நிவாரணம் அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பாகிஸ்தான் மின்சக்தி அமைச்சர் அவைஸ் லெஹாரி தெரிவித்துள்ளார்.

மின் கட்டண வரி தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ள உடன்பாட்டை உடனடியாக அமுல்படுத்துமாறு பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி கோரிக்கை விடுத்துள்ள சூழலிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்தில் நீண்ட பேரணி நடாத்தப்படும் என்றுள்ள ஜமாஅதே இஸ்லாமி, பொருட்களின் விலை உயர்வு மற்றும் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 28 ஆம் திகதி வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

## ஹிஸ்புல்லா—இஸ்ரேல் பரஸ்பரம் பாரிய தாக்குதல்கள்; போர் பதற்றம் அதிகரிப்பு



இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று (25) நூற்றுக்கணக்கான ரொக்கெட் குண்டுகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் சரமாரி தாக்குதல் நடத்தியதோடு மிகப்பெரிய தாக்குதல் ஒன்றை தடுப்பதற்கு சுமார் 100 போர் விமானங்கள் மூலம் லெபனான் மீது தாக்குதல் தொடுத்ததாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. கடந்த 10 மாதங்களுக்கு மேலாக எல்லையில் இடம்பெற்று வரும் பரஸ்பர தாக்குதல்களில் மிகப்பெரிய மோதலாக இது உள்ளது.

இரவு வானில் நெருப்புப் பந்தாக ஏவுகணைகள் ஊடுருவிச் செல்வது தெரிந்ததோடு இஸ்ரேலில் வான் தாக்குதல் எச்சரிக்கையாக சைரன் ஒலி எழுப்பப்பட்டு தொலைவில் குண்டு சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்ததாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர். தெற்கு லெபனானில் கையாமிலுள்ள வீடுகளுக்கு மேலால் கறும்புகை எழுந்தன.

இந்த தாக்குதல்களில் முழு சேத விபரமும் உடன் உறுதி செய்யப்படாத நிலையில் தாக்குதலை தொடரும் திட்டமில்லை என்று ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளது. மறுபுறம் முழு அளவில் போர் ஒன்றை நாடவில்லை என்று இஸ்ரேல் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

வடக்கு இஸ்ரேலில், சைரன் ஒலி எழுப்பப்பட்டதோடு பல இடங்களிலும் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பான அயர்ன் டோம் அமைப்பு தெற்கு லெபனானில் இருந்து வந்த ரொக்கெட் குண்டுகளை சுட்டு வீழ்த்தியது. நாடு முழுவதும் உஷார் நிலை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலின் அம்புலன்ஸ் சேவை குறிப்பிட்டுள்ளது.

காசா போருக்கு இணையாக இடம்பெறும் இந்த மோதல் தீவிரம் அடையும் பட்சத்தில் அது ஹிஸ்புல்லா ஆதரவு ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆதரவு அமெரிக்காவும் தொடர்புபட்ட பிராந்திய போர் சூழல் ஒன்று ஏற்படுத்தும் அச்சுறுத்தல் நீடித்து வருகிறது.

ஹிஸ்புல்லா மூத்த தளபதி புவாத் ஷுக்ர் கடந்த மாதம் படுகொலை செய்யப்பட்டதற்கு முதல் கட்ட பதில் நடவடிக்கையாகவே இஸ்ரேல் மீது இந்தத் தாக்குதலை நடத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இதன்போது 11 இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேலை நோக்கி 320 கட்யூஷா ரொக்கெட்டுகளைக் கொண்டு தாக்கியதாக ஹிஸ்புல்லா தெரிவித்தது.

மறுபுறம் ஹிஸ்புல்லா பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகி வருவதை பதிப்பிட்டு 100 போர் விமானங்களை பயன்படுத்தி தெற்கு லெபனானில் உள்ள 40இற்கும் அதிகமான ஹிஸ்புல்லா ரொக்கெட் ஏவு தளங்களை தாக்கி அழித்ததாகவும் பாரிய தாக்குதல் ஒன்றை முறியடித்ததாகவும் இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இந்தத் தாக்குதல்கள் மூலம் ஆயிரக்கணக்கான ரொக்கெட் ஏவு கருவிகளை அழித்ததாக இஸ்ரேல் கூறியது. பெரும்பாலான தாக்குதல்கள் வடக்கு லெபனானில் நடத்தப்பட்டதோடு மத்திய லெபனானும் இலக்கு வைக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலின் கூற்றை நிராகரித்திருக்கும் ஹிஸ்புல்லா, திட்டமிட்டபடி தாக்குதல்களை நடத்தியதாகவும் ஷுக்ரின் படுகொலைக்கு தமது பதில் நடவடிக்கை வேறு ஒரு தினத்தில் மீண்டும் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுக் காலை இஸ்ரேல் அமைச்சரவை அவசரமாகக் கூடியது.

பாதுகாப்பு அமைச்சர் யொவ் கல்லன்ட் அவசர நிலையை அறிவித்ததோடு களத்தில் உள்ள நிலைமைக்கு ஏற்ப இஸ்ரேல் பதில் நடவடிக்கை எடுக்கும் என்றும் முழு அளவில் போர் ஒன்றை நாடவில்லை என்றும் வெளியுறவு அமைச்சர் காட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

டெல் அவிவின் பென் கூரியன் விமானநிலையத்தில் இருந்து விமானங்கள் செல்வது மற்றும் வருவதும் சுமார் 90 நிமிடங்கள் இடைநிறுத்தப்பட்டன.

'எமது நாட்டின் பாதுகாப்புக்கும் வடக்கில் வசிப்பவர்களை பாதுகாப்பாக தமது வீடுகளுக்கு அனுப்புவதற்கும், யார் எமக்கு தீங்கு செய்கிறார்களோ அவர்களுக்கு நாம் தீங்கு செய்வோம் என்ற சாதாரண விதியை பின்பற்றி எமது நாட்டின் பாதுகாப்புக்கு முடிந்த அனைத்தையும் செய்ய நாம் உறுதியாக உள்ளோம்' என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். லெபனான் இடைக்கால பிரதமர் நஜிப் மிகாதி, தேசிய அவசரக் குழு அமர்வு ஒன்றில் அமைச்சரவை அமைச்சர்களை சந்தித்தார். ஹிஸ்புல்லா தலைவர் செய்யிது ஹசன் நஸ்ரல்லா நேற்று மாலை தொலைக்காட்சியில் உரை நிகழ்த்தி இருந்தார். தாக்குதல்களை நிறுத்தும்படி லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படை மற்றும் ஐ.நா. விசேட ஒருங்கிணைப்பு அலுவலகம் அனைத்து தரப்புகளுக்கும் அழைப்பு விடுத்திருப்பதோடு நிலைமை குறித்து கவலை வெளியிட்டுள்ளன.

## கெய்ரோ பேச்சில் முன்னேற்றம் இல்லை; காசாவில் தொடர்ந்தும் கடும் தாக்குதல்

### கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 71 பலஸ்தீனர்கள் பலி

கெய்ரோவில் மீண்டும் ஆரம்பமான காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இல்லாத சூழலில் காசாவில் மோதல்கள் மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன.

போர் நிறுத்த முன்மொழிவில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே உள்ள இடைவெளியை நீக்கும் சமரச முயற்சியாகவே நேற்று முன்தினம் (24) கெய்ரோவில் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. எனினும் பல மணி நேரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று பேச்சுவார்த்தையுடன் தொடர்புபட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

“கொய்ரோ பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. பிலடெல்பியா தாழ்வாரத்துடன் சேர்த்து எட்டு நிலைகளில் தொடர்ந்து நிலைகொள்ள இஸ்ரேல் உறுதியாக உள்ளது” என்று இந்தப் பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய பலஸ்தீன அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

காசாவின் மனிதாபிமான நிலைமை மோசமடைந்து ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, அங்கு போலியோ பாதிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையிலேயே கெய்ரோ பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளது.

எனினும் காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய வான் மற்றும் தரைவழி தாக்குதல்களில் 71 பேர் கொல்லப்பட்டு மேலும் 112 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் கடந்த 10 மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,405 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 93,468 பேர் காயமடைந்துள்ளனர்.

மத்திய காசாவின் டெயிர் அல் பாலாஹ்வில் இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் கொல்லப்பட்டதாக காசா மருத்துவ வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஆளில்லா விமானத் தாக்குதல் ஒன்றை நடத்திய பின்னர் இஸ்ரேலிய போர் விமானங்கள் பாரிய குண்டு ஒன்றை வீசியதாக பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இதில் அல் ஹெக்கர் குடும்ப வீட்டின் மீது இடம்பெற்ற தாக்குதலிலேயே அந்த குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



இஸ்ரேல் பிரதிநிதிகள் மற்றும் எகிப்து, கட்டார், அமெரிக்க மத்தியஸ்தர்கள் இடையே பேச்சுவார்த்தை ஆம்பிக்கப்பட்ட நிலையில் முன்மொழியப்படும் யோசனைகளை மீளாய்வு செய்வதற்காக ஹமாஸ் பிரதிநிதிகளும் கடந்த சனிக்கிழமை கெய்ரோ சென்றிருந்தனர்.

அமெரிக்க பேச்சுவார்த்தையாளர்கள் எகிப்து பிரதிநிதிகளை சந்தித்ததோடு தொடர்ந்து எகிப்து மற்றும் கட்டார் பிரதிநிதிகளை சந்தித்ததாகவும் அதனைத் தொடர்ந்து எகிப்து மற்றும் கட்டார் பிரதிநிதிகள் ஹமாஸ{டன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகளை விடுவிக்கும் பேச்சுவார்த்தை கடந்த பல மாதங்களாக நீடித்து வரும் நிலையில் இதுவரை முன்னேற்றம் காண தவறியுள்ளது.

இந்நிலையில் முக்கிய பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் வடக்கு காசாவுக்கு மக்கள் திரும்புவது போன்ற சிக்கல் நிலவும் விடயங்களில் சமரசம் எட்டப்பட்டிருப்பதாக எகிப்து தரப்பை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

எனினும் இழுபறி நீடிக்கு முக்கிய விடயங்களில் சமரசம் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக காசாவின் எகிப்து எல்லையான பிலடெல்பியா தாழ்வாரத்தில் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டை தக்கவைக்க முயன்று வருகிறது.

முன்னர் இணங்கிய விடயங்களில் இருந்து இஸ்ரேல் பின்வாங்குவதாக ஹமாஸ் குற்றம்சாட்டி இருப்பதோடு இஸ்ரேல் அதனை மறுத்துள்ளது. அமெரிக்கா நல்லெண்ணத்துடன் மத்தியஸ்தத்தில் ஈடுபடவில்லை என்றும் அந்த அமைப்பு குற்றம் சாட்டுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 26ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.